www.akaram.eu



# AKARAM
# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 9.08 திருவள்ளுவர் ஆண்டு 2053

14.02.2022 - 13.03.2022

ISSN : 2195-6480




## இலங்கை யாருக்குச் சொந்தம்

### தமிழருக்கா... சிங்களவருக்கா... சீனருக்கா....

FREE Magazine

## தெளிவில்லாத இலங்கையின் நிலம் கையகப்படுத்துதல் சட்டம்

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA



Dortmund மாநகரில் மளிகை உலகின்
BIGG BOSS
TKS
BEST FOODS
மலிவும் தரமும்
என்றும் உங்கள் TKS
100€க்கு மேல்
கொள்வனவு செய்பவர்களுக்கு
149€
பெறுமதியுள்ள
119€* கிடைக்கும்
V BOX
Rheinische Str.79-44137-Dortmund
tksbestfoods
0049 231 950 468 83
www.tksbestfoods.de
tks-bestfoods@web.de







## 20 countries

### 250 minutes

250 minutes from Germany to 20 countries.

250 minutes from Germany to EU

Internet Flat Highspeed up to 8 GB

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app
(offer ends 15 december 21)

Surf and make calls within the EU

National Flat call rate

Now for 4weeks for "

**19,99€***




## Germany Flat

### 15 GB Internet

National Flat call rate

500 minutes from Germany to EU


Internet Flat 15 GB Highspeed

Secure your +5 GB bonus with the Ortel Mobile app
(offer ends 15 december 21)

Surf and make calls within the EU

Now for 4weeks for "

**24,99€***




## 11 GB Internet Flat


Highspeed up to 11 GB

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app
(offer ends 15 december 21)

Internet telephony available
Surfing the Internet within the EU

Now for 4weeks for "

**19,99€***




**OHNE PAUSE NACH HAUSE.**

Ortel. Wir sprechen Deine Sprache.

Google play App Store

Aufladbar mit: ortel MOBILE O2 e-plus

AKARAM
# அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 தை 2022 - 13 மாசி 2022

சுவடி / ISSUE 9.08

**தலைமை ஆசிரியர்**

திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**

திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**

திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**

திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**

திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. Box 13 06 31,**
**44316 Dortmund,**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu

ISSN 2195-6480

www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.

## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்கள் விளம்பரதார வள்ளல் பெரு மக்கள் அனைவருக்கும் வணக்கத்தையும், நல்லாசிகளையும் தெரிவிப்பதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகிறது.**

தமிழர்களுக்கு மிகவும் பிடித்தமான பொழுது போக்காக சினிமா, சின்னத் திரைத் தொடர், பட்டிமன்றங்கள், அரசியல் விவதங்களை விட்டால் வேறு எதுவும் கிடையாது. அதனால் வாழ்க்கையின் முக்கியமான விடயங்களைத் தீர்மானிக்கும் அரசியல் என்பது, பட்டிமன்ற விவாதம், நகைச்சுவை அல்லது பாட்டுக்குப் பாட்டு போன்ற மொழுது போக்கும் அரட்டை அரங்கம் போன்ற வேடிக்கை விநோத உரையாடலாக மாற்றப்பட்டு விட்டது.

அப்படித்தான் தமிழரின் அரசியல் அபிலாசைகளைப் போதித்து வந்த அரசியல் கட்சிகளும், அரசியல்வாதிகளும் கோமாளிகளாகப் பேசியும், நடந்தும் நம் இனத்தின் அழிவை அவர்களே தேடிவிட்டு இப்பொழுது பழியை அடுத்தவர் மேல் போட்டு விட்டுத் தப்பிக்கப் பார்க்கிறார்கள்.

70 வருடங்களாகத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் என வாயால் வடை சுட்டுப் பதவி, பணசுகம் அனுபவித்த சட்டதரணிகளால் இன்றுவரை தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் என்ன? என்பதைச் சொல்லத்



தெரியாத ஊமைகளாக உள்ளனர். இவர்களால் இன்னும் எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும், ஏற்ற ஓர் பதிலை ஒரே குரலில் சொல்ல முடியாதவர்களாக உள்ளனர்.

1987இல் பேசப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம் ஏற்படுத்திய நாசங்களை மறந்தவர்களாக, மீண்டும் கரைந்து போகும் ஐஸ்கிறீமுக்காக அழும் குழந்தைகள்போல இந்தியப் பிரதமர் மோடியிடம் கேட்பதற்கு சுமந்திரன், சிறீதரன் கூட்டம் ஓர் புறமும், மற்றக் குழுவினர் மறு புறத்திலும் பினாத்தித் திரிகிறார்கள். இதில் நரேந்திர மோடிக்கும் இச்சட்டத்திற்கும் என்ன உறவு? அவரை எதற்காக நாடவேண்டும்?

இதிலே இந்தியா தலை இட்டே தீரவேண்டும் என்கிற கட்டாயத்தைச் சீனாவின் இலங்கை தொடர்பான சீனாவின் உறவுப்பாலம் ஏற்படுத்தி விட்டது என்பதை நாம் மறுக்க வில்லை. ஆனால், அதற்கான பழியை இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகள் மேல் போட்டு, அவர்கள் ஏன் இந்தியாவிடம் உதவி கேட்கவில்லை? எனப் பிழைப்பிடிக்கும் அரசியலை செய்கிறார்கள்.

சிங்களத்தின் திட்டத்தை நிறைவேற்றத் தமிழ் அரசியல்வாதிகள் எதற்காக இந்தியாவிடம் போக வேண்டும்? இதற்கான பதிலை யார் தரவேண்டும்? யார் தருவார்?

எதற்காக எமது அரசியல் தலைவர்கள் இந்தியாவின் காலடிகளில் விழவேண்டும்? இந்தியா பேச வேண்டிய இடம் கொழும்பு நா.சபை. அங்கே எவரிடம், என்ன பேசவேண்டுமோ? அதைப் பேசச் சொல்ல வேண்டியவர்கள் ஓய்வு பெற்ற 'றோ' உளவாளிகளான கேணல் அரிகரனும், மதன் குமாரும்.

எங்கள் அரசியலை எங்களைப் பேச விடுங்கள் அல்லது உங்களின் அரசியலை பேச வேண்டிய இடத்தில் நீங்களே பேசிப் பாருங்கள்.

முழுக்க நனைஞ்ச நமக்கு யாருடைய முக்காடும், முந்தானையும் தேவை இல்லை. புரிந்தவருக்குப் புரியட்டும். புரியாதவர் போர்த்திப் படுக்கட்டும். ஒருநாள் நமக்கும் விடியல் வராமலா போகும்?

அன்புடன் விடைபெறும்,

**ஆசிரியர், அகரம் குழுமம்**




# தமிழர் விதியை மாற்றியவர்கள் யார்?

த. எதிர்மன்னசிங்கம்




இவர்களில் ஒருவர் யானைக் கட்சியைப் பூனைக் கட்சியாக்கி, பூச்சியாக மாற்றிவிட்ட ரணில் விக்கிரம சிங்க, மற்றவர் அவரது கட்சியின் ஆயுட்கால உறுப்பினர் புலிகளால் தண்டிக்கப்பட்டு, தப்பி ஓடிய குடும்ப வாரிசான சுமந்திரன். இந்திய - இலங்கை அரசின் ஆதரவு இல்லை என்றால், இவரால் கிராம சபைத் தலைவராகும் அளவுக்கு மக்களின் ஆதரவைப் பெற முடியாத உலக மகா கதாநாயகன். இவரது புலிகள் எதிர்ப்புக் கொள்கை காரணமாக மாற்று இயக்க, மாற்றுக் கட்சி ஆதரவாளர்களால் இந்திரன், சந்திரன் என்று கொண்டாடப் படுகிறார்.

சம்பந்தன் இல்லாதிருந்தால் சுமந்திரன் வந்திருக்க முடியாது. நீலன் சந்திரிகா இல்லையென்றால் ரவிராஜின் படுகொலையும், சம்பந்தன் தமிழர் தலைவனாகக் கொழும்பைப் பார்த்திருக்க முடியாது. இன்றும் மூதூர் தங்கத்துரை தமிழ் மக்களின் தலைவராக எம்மிடையே வாழ்ந்து கொண்டிருப்பார். புலிகள் இல்லை யென்றால் நீலனும், சந்திரிகாவும் இலங்கை அரசியலில் இடம் பிடித்திருக்க முடியாது. புலிகளை அமெரிக்கா மூலம் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் லக்ஷ்மண் கதிர்காமர் என்ற துரோகியால் சேர்த்திருக்க முடியாது. உலக நாடுகள் பல புலிகளை அழிக்கும் அணியில் இணைந்திருக்கவும் வாய்ப்பில்லாமல் போயிருக்கும்.

இவை எல்லாம் 'காகம் இருக்கப் பனங்காய் விழுந்த கதை' எனப் புறந்தள்ளப் பலர் இன்றும் உள்ளனர். ஆனால், அகரம் தனது இதழில் "காட்டிக் கொடுத்த



கூட்டமைப்பும், வேட்டை ஆடிய வெளி நாடுகளும்" என்கிற தலைப்பில் சொன்ன கருத்தை, இன்றும் வெளியாகும் செய்திகள் உறுதிப்படுத்தி வருகின்றன.

மண்ணை வளப்படுத்தும் மனப்பான்மை கொண்ட விவசாயியாக அவதாரம் எடுத்துள்ள சுமந்திரன், கட்டாந்தரையில் உரம் வீசிக் காட்டும் காட்சி, தன்னை மண்ணின் மைந்தனாக காட்ட முனைகிறார் என்பதையே சொல்கிறது. 'சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது' என்பதே தமிழ் மக்களின் வேத மந்திரம். அந்த உண்மை போலி அரசியல்வாதிக்குத் தெரிய வாய்ப்பில்லை.

மகாபாரதப் போரில் ஒரே ஒரு மாயக் கண்ணன் வழி நடத்தியது போல, தமிழீழ விடுதலைப் போரை நடத்திய ஒரே ஒரு மாயக் கண்ணன் பிரபாகரன் என்பதை, வரலாற்றில் இருந்து அழிக்கவே வந்த துரியோதனர்கள்தான் இவர்கள் என்பதை, தோலுரித்துக் காட்டும் காலம் இது. இதனைத் தவற விட்டால் தமிழ் ஈழ விடுதலை வரலாறு ஈனர்களின் புராணம் ஆக்கப்பட்டு விடும்.



மகாபாரத கண்ணன் பேசாத பொய்கள் இல்லை, செய்யாத சூழ்ச்சியும், வஞ்சனையும் இல்லை. யாருக்காக, எதை எல்லாம் செய்ய வேண்டுமோ? அவற்றை எல்லாம் தர்மம் வாழவெனச் சொல்லி, தேரையும் ஓட்டுவான். யாரையும் மாட்டி வைத்து, மாயச் சிரிப்பால் மழுப்பித் தப்பித்தும் விடுவான்.

சுமந்திரனும் அப்படித்தான். பொத்துவில் தொடக்கம், பொலி கண்டிவரை என்ற அரசியல் பயணம் பாதியில் முறித்து, மீதியை முடித்தது போல இப்பொழுது ஏரோட்டி பசளை இட்டு, மீண்டும் அரசியல் செய்யக் கிளம்பி விட்டார். எனவே பழையதைக் கொஞ்சம் கிண்டிக் கிளறிவிட வேண்டி உள்ளது.



அக்காலத்தில் படிப்பும், பதவியும், பணமும், அரசியல் சிந்தனையும் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்களின் வாழ்வியலாக இருந்தது. சிங்களவரிலும், தமிழர்களிலும், ஆங்கிலேய ஆட்சியாளரின் செல்லப் பிள்ளைகளாக ஆங்கிலமும், அரச பதவிகளிலும் முன்னுரிமை பெற்ற கத்தோலிக்கர்களே ஆதிக்கம் செலுத்தினர்.

ஆனால், ஆட்சி அதிகாரம் சாதாரண வாக்காளரிடம் மாறிய பின்னர், சிங்களவர்களும் புத்த மத மக்களின் விருப்பம் அறிந்த சிங்கள அரசியல் தலைவர்கள் அனைவரும் புத்தமத சிங்கள இனவெறியர்களாக மாறி, சிங்கள மக்களின் தேசியத் தலைவர்களாக மாறி, இனவாத அரசியலை முன்னெடுத்துத் தமிழ் மக்களை இனஅழிப்பின் மூலம் முழுநாட்டையும் தமதாக்கி விட்டனர்.

ஆனால் தமீழர்களை வழிநடத்த வந்த எந்த ஒரு கத்தோலிக்க அரசியல்வாதியும், மதமும் மாறாமல் தமிழ் மக்களின் அரசியலையும் முன்னெடுக்காமல், சிங்கள இன வெறி அரசுகள் இழுத்த பக்கமெல்லாம் இழுத்துச் சென்று, தமிழ் இன அழிப்புக்கு வசதியாக நடந்து கொண்டனர். செல்வநாயகம், நாகநாதன் மன்னார் ,அழககோன் வின்சன் மாட்டின் போன்ற பலமான கத்தோலிக்கத் தலைவர்களின் தலைமையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பெரும் பான்மையான இந்துக்களின் நலன்களில் அக்கறை கொள்ளாமல், உலக கத்தோலிக்க நாடுகளின் அரசியலை 1947 தொடக்கம் செய்து வந்தது.

தமிழ் மக்களின் தலைமையைத் தக்க வைக்க, தமிழ் மக்களின் உண்மை விசுவாசிகளான காவலூர் நவரத்தினம், கிளிநொச்சி சிவசுந்தரம், மட்டக்களப்பு செ. இராசதுரை போன்றோரை அமரர் வன்னியசிங்கம் அவர்களின் அகால மறைவின் பின்னர் வெளியேற்றி விட்டுத் தலைமைப் பதவியைத் தனதாகச் சுவீகரித்த திரு. அப்பாபிள்ளை அமிர்தலிங்கமும், மங்கையர்க்கரசியும் கட்சியின் நிதியையும், கொள்கைகளையும் வீசி விட்டுத் துரோகிகள் என்று அவர்களைத் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றி விட்டு தமிழ் மண்ணையும், மக்களையும் அழிவுக்கு எடுத்துச் சென்றதை 2009ல் உலகமே கண்டது.

ஆனால், சம்பந்தன் தலைமையில் புலிகளால் பெற்று வளர்த்து விடப்பட்ட தமிழர் தேசியக் கூட்டமைப்பு, புலிகள்




அழிப்பின் பின்னர் தீவிர தமிழ்த் தேசியவாதிகள் விலக்கப்பட்டு, முற்றிலும் துரோகிகளின் கூட்டமைப்பாக மாற்றப்பட்டு, கொலைகாரத் தலைமைகளின் கொத்தடிமைகளாக மாறினர்.

இந்த அளவுக்கு ஆட்டம் போட்ட கூட்டம், கிராம சபைக்குள்ள அதிகாரம் இல்லாத மாகாண சபையும், சல்லிக் காசும் பெறாத 13ஆவது திருத்தச் சட்டமும் தந்தால் போதும் என இந்தியாவின் காலடியில் விழத் தயாரான நிலையில் தனிப் பெரும் தலைவனாக மேதகு மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் என்கிற ரணிலின் கூட்டாளி கட்சியின் ஆயுட்கால அடிமைத் தொண்டன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையும், கூட்டமைப்பின் குல்லாவும் அணிந்து வருகிறார்.

ஆகையால் ஒற்றையாட்சி அமைப்பிற்குள்ளே வழங்கப்படும் அதிகாரப் பகிர்வான 13ஆவது திருத்தம் பயனற்றது என்பது, எமது நிலைப்பாடு. ஆனால், அதைக் கூட இலங்கை அரசு முழுமையாக நிறைவேற்றாத காரணத்தினால் அதை நிறைவேற்றி, அதற்கும் அப்பால் சென்று கொடுத்த அதிகாரங்களை மீளப்பெற முடியாத ஒருமுறை வேண்டும் என்று இந்த கடிதம் கோருகின்றது. இதனை நம்ப முடிந்தால் யாரும் நம்புங்கள்.

எமது மக்கள் சர்வதேச சட்டத்தின் கீழே ஒரு மக்கள் எனும் ஸ்தானத்தைப் பெற்றவர்கள். எனவே, சுயநிர்ணய உரிமை எங்களுக்கு உண்டு. அதனை உள்நாட்டிலே பிரயோகிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளோம். அந்தவகையில் சமஷ்டி கட்டமைப்பிலான அதிகாரப் பகிர்வு முறைதான் உகந்தது என்பதை இந்தக் கடிதம் எடுத்து சொல்கின்றது.



பூமிபுத்திரன்




# மாலியும், பிரான்சின் காலனித்துவ மனோபாவமும்

மேற்கு ஆபிரிக்க நாடான மாலியைக் கட்டுப்பாட்டில் வைத்துள்ள இராணுவ ஆட்சியாளர்களுக்கும், அந்த நாட்டில் தீவிரவாத முறியடிப்பு நடவடிக்கைகளுக்காகப் படைகளை நிறுத்தி வைத்துள்ள முன்னாள் காலனித்துவ எசமானான பிரான்ஸ் நாட்டுக்கும் இடையிலான மோதல்கள் உக்கிரம் அடைந்து வருவதைப் பார்க்க முடிகின்றது.





நிலங்களால் சூழப்பட்ட நாடான மாலி 1960இல் பிரான்சின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு, சுதந்திர நாடாகியது. 2 கோடிக்கும் அதிகமான மக்கட்தொகையைக் கொண்ட இந்த நாட்டில், நீண்டகாலமாக அரசியல் நிலவரம் நிலையற்றதாகவே இருந்து வருகின்றது. 2012, யனவரியில், நாட்டின் மேற்குப் பிரதேசத்தில் உருவாகிய பிரிவினைப் போராட்டம் வெகு விரைவிலேயே பெரும் மோதலாக உருவெடுத்தது. உள்நாட்டுப் படையினரால் நிலைமையைச் சமாளிக்க முடியாத நிலை தோன்றியதால், பிரான்ஸ் நாட்டிடம் படையுதவி கோரப் பட்டது.

வடக்கில் பெரும் நிலப்பரப்பைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்த தீவிரவாதிகள், தலைநகரைக் கைப்பற்றும் நோக்குடன் படை நடவடிக்கைகளை ஆரம்பித்த வேளை, 2013, யனவரியில் உதவிக்கு விரைந்த பிரான்ஸ் தலைமையிலான படையினர், மாலிப் படையினரோடு இணைந்து இஸ்லாமியத்

தீவிரவாதிகளுக்கு எதிராக, மேற்கொண்ட கடுந் தாக்குதல்களின் விளைவாக பெருமளவு நிலம் மீளக் கைப்பற்றப்பட்ட போதிலும், தீவிரவாதிகளின் கொட்டத்தை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமற் போய்விட்டது.

இதேவேளை, இஸ்லாமியத் தீவிரவாதிகள் தமது நடவடிக்கைகளை எல்லையோரம் உள்ள புர்க்கினா பாசோ மற்றும் நைஜர் ஆகிய அயல்நாடுகளில் விரிவாக்கத் தொடங்கினர். தனது படைகளின் எண்ணிக்கையை நான்காயிரம் வரை அதிகரித்த பிரான்ஸ், ஐரோப்பிய நாடுகள் சிலவற்றைத் துணைக்கு அழைத்துக் கொண்டது. இந்த அணியில் தற்போது பிரான்ஸ் தலைமையில் 15 ஐரோப்பிய நாடுகளின் படைகள் செயற்பட்டு வருகின்றன.

காலனித்துவ விரிவாக்கத்தில் எப்போதும் போல கண் வைத்துள்ள பிரான்ஸ், தீவிரவாதிகளை ஒடுக்குவது என்ற போர்வையில், தனது ஆதிக்கத்தை மேற்கு ஆபிரிக்கப் பிராந்தியத்தில் விரிவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியது. இதற்காக சில வேளைகளில் தீவிரவாதிகள் மத்தியில் பிரித்தாளும் தந்திரங்களைப் பாவித்து, தனது இருப்பைத் தொடர்ந்து தக்க வைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. ஒரு கட்டத்தில் மாலி அரசாங்கம் விழித்துக் கொண்ட போது, அரசாங்கத்தைத் தன்வசப் படுத்திக் கொண்டது. ஆனால், களத்தில் உயிரைக் கொடுத்துப் போராடும் ஆயுதப் படையினரால் நீண்ட காலத்துக்கு இவற்றைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

பிரான்ஸால் தீவிரவாதிகளை முற்றிலுமாக ஒடுக்க முடியாது. அவர்கள் அதனை விரும்பவும் இல்லை என்பதை உணர்ந்து கொண்ட படை உயர் அதிகாரிகள், மாற்று வழிகளை நாடத் தொடங்கினர். அதில் ஒன்று ஆட்சியைக் கைப்பற்றுவது. மற்றையது, ரஸ்யக் கூலிப்படையினரான 'வக்னர் குறுப்' ஆலோசகர்களைப் பணிக்கமர்த்துவது. இரண்டையும் எதிர்பார்த்திராத பிரான்ஸ், தனது வழக்கமான பாணியில் இரண்டு விடயங்களையும் கையாளத் தொடங்கியதில், இராணுவ ஆட்சியாளர்களுக்கும், பிரான்ஸ் அரசாங்கத்திற்கும் இடையில் மோதல்கள் உருவாகத் தொடங்கின.

2020 ஒகஸ்ற் மாதத்தில் கேணல் அசிமி கொய்ற்றா தலைமையில் இராணுவச் சதி இடம்பெற்று, ஆட்சி கைப்பற்றப்பட்ட நாள் முதலாகவே பிரான்சுக்கும், பொதுவில் மேற்குலகிற்கும் இடையிலான மோதல்கள் பெரிதும் ஆரம்பமாகி விட்டன. தாங்கள் சொல்வதை மாத்திரம் கேட்கும் ஆட்சியாளர்களைப் பதவியில் அமர்த்திப் பார்க்க விரும்பும் மேற்குலகின் கொள்கைக்குப் புதிய ஆட்சியாளர்கள் இணங்க மறுத்த நாள் முதலாக, இந்த மோதல் போக்கு அவதானிக்கப் பட்டாலும், ரஸ்யக் கூலிப்படையின் வருகையின் பின்னர் இந்த மோதல் உக்கிரம் பெறத் தொடங்கியது.

பிரான்ஸ் உள்ளிட்ட வல்லரசு நாடுகள் பலவற்றிலும் கூலிப் படையினர் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அங்கமாக உள்ள போதிலும், ரஸ்யக் கூலிப் படையினரை,






ரஸ்ய அரசாங்கத்தின் விஸ்தரிப்பு நோக்கத்திற்குத் துணை போபவர்களாகப் பார்க்கும் மனோநிலையிலேயே மேற்குலகம் உள்ளது. இதனால் ரஸ்யக் கூலிப் படையின் வருகை மேற்குலகின் மேலாதிக்கத்திற்கு அச்சுறுத்தலாகப் பார்க்கப்படுகின்றது.

இந்த மோதல் போக்கின் உச்சமாக, அண்மையில் பிரான்ஸ் வெளி விவகார அமைச்சர் ஜீன் ஈவ்ஸ் லே டிரியன் தெரிவித்த கருத்துகள் மாலியின் ஆட்சியாளர்களைக் கடும் கோபத்திற்கு ஆளாக்கியது. அதிலும், 'தற்போதைய மாலிய அரசாங்கம் சட்ட விரோதமானது' என அவர் கருத்து வெளியிட்டதைத் தொடர்ந்து, மாலிக்கான பிரான்ஸ் தூதுவரிடம் கண்டனம் தெரிவித்த அரசாங்கம், 72 மணி நேரத்திற்குள் அவரை நாட்டைவிட்டு வெளியேற்றும் உத்தரவைப் பிறப்பித்தது. இதனைத் தொடர்ந்து, மாலியில் நிலைகொண்டுள்ள தனது படைகளை வெளியேற்றும் முடிவை பெ;பரவரி நடுப்பகுதியில் தெரிவிக்க இருப்பதாக பிரான்ஸ் அரசாங்கம் அறிவித்துள்ளது.

முன்னதாக, இந்த வருடத்தின் ஆரம்பத்தில் பொதுத் தேர்தல்களை நடாத்தி, குடிமக்கள் அரசாங்கம் ஒன்றை அமைக்க உள்ளதாக மாலி அரசாங்கம் வழங்கியிருந்த வாக்குறுதியை மறுதலித்து, 2025 டிசம்பர் மாதத்திலேயே பொதுத் தேர்தல் நடாத்தப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. மேற்குலகினதும், ஐ.நா. சபையினதும் கண்டனங்களைச் சந்தித்த இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, 15 நாடுகளைக் கொண்ட 'மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதாரக் கூட்டமைப்பு' மாலி மீதான பொருளாதாரத் தடைகளை அறிவித்தது. அத்தோடு தமது நாடுகளின் எல்லைகளையும், வான்பரப்பையும் மூடும் உத்தரவையும் அவை விடுத்தன. அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் வரவேற்பைப் பெற்ற இந்த அறிவித்தல்களை எதிர்த்து, மாலியில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இதேவேளை, டென்மார்க் படைகளின் மாலி வருகை மற்றொரு சர்ச்சையாக வெடித்தது. பிரான்ஸ் தலைமையிலான நாடுகளின் படையணியில் இணைந்து கொள்வதற்காக 105 பேர் கொண்ட அணியொன்று மாலி வந்தபோது, தமது அரசாங்கத்தின் அனுமதியை முறையாகப் பெறாமல் அவர்கள் வந்துள்ளதாகத் தெரிவித்த மாலிய அரசாங்கம் அவர்களை அனுமதிக்க முடியாது என அறிவித்தது.

இத்தகைய பின்னணியிலேயே தனது படைகளை முற்றாக விலக்கிக் கொள்ளப் போவதாக பிரான்சின் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஒரு நாட்டில் ஜனநாயக அடிப்படையிலான ஆட்சி நிலவ வேண்டும் என எதிர்பார்ப்பதில் எந்தவிதத் தவறும் இருக்க முடியாது. எனவே, மாலியில் பொதுத் தேர்தல்கள் நடாத்தப்பட்டு, மக்களால் தெரிவு செய்யப்படும் நபர்களின் கைகளில் ஆட்சியை ஒப்படைக்க வேண்டிய கடப்பாடு, இராணுவ ஆட்சியளார்களுக்கு உள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆட்சியில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும், தமது சொல் கேட்டு நடப்பவர்களாக இருக்க வேண்டும்.

தமக்கு வேண்டாத நாடுகளோடு தொடர்பில் இருக்கக் கூடாது என நினைப்பதே தவறு. மாலியின் ஆட்சியாளர்களாக யார் இருக்க வேண்டும்? என்பதை மாலி நாட்டு மக்களே முடிவு செய்ய வேண்டும். அவர்களுக்கு ஆலோசனை சொல்வது வேறு, கட்டளை இடுவது வேறு. தம்மை இன்னமும் காலனித்துவ எசமானர்களாக நினைத்துக் கொள்ளும் மனோபாவத்தில் இருந்து விடுபடுவதே பிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு நல்லது.

# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

## மண்மணம் மாறாத சுவைதரும்
## தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்

ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்




**www.jaffnastores.com**
**info@jaffnastores.de**

**Tel. - 0521 174794**
**Mobile - 01732807906**

**Feilenstraße 8**
**33602 Bielefeld**



ப்ரியமதா பயஸ், தமிழீழம்




# தெளிவில்லாத இலங்கையின் நிலம் கையகப்படுத்துதல் சட்டம்







இலங்கையின் நில கையகப் படுத்துதல் சட்டம் தெளிவில்லாதது, மக்கள் நீதிமன்றங்களுக்குப் போகாத வரையில் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி, அரசால் நிலத்தை கையகப்படுத்த முடியும் என்கின்ற அளவிலேயே நில கையப்படுத்தல் சட்டம் உள்ளது. இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி நில அபகரிப்புகள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வகை தொகை இன்றி நடக்கின்றமை கண்கூடு.

இப்போது மக்கள் பலர் நீதிமன்றங்கள் செல்ல ஆரம்பித்து இருக்கும் நிலையில், அரசுக்கு மக்களின் நிலங்களை கையகப்படுத்த ஒரு வலுவான ஆயுதம் தேவைப் படுகிறது. அதுதான் மதம் சார்ந்த ஆக்கிரமிப்பு. பௌத்த விகாரைகளை, அனுஷ்டானங்களை காரணம் காட்டி இப்போது நில ஆக்கிரமிப்பு நடந்தேறுகிறது.

அந்தவகைக்குள் பெரும்பாலும் முல்லைத்தீவு, வவுனியா பகுதிகள் இப்போது குறிவைக்கப்பட்டுள்ளன. காரணம் இந்த இடங்களில் படித்த வாலிபர்களின் திட்டங்களினூடாக, தற்காலிக பெர்மிட் அனுமதிகளுடன் இருக்கும் காணிகள், அரசுடமை ஆக்குவதற்கு இப்போது அரசு முயல்கிறது.

அண்மையில் வவுனியா, சமளம்குளம், கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட பாரம்பரிய கிராமங்களில் ஒன்றாகிய இத்திக்குளம் கிராமத்தின் எல்லையில் அமைந்துள்ள கல்நாட்டுகுளப் பகுதிகளின் எல்லைகளை இலங்கை வனத்துறையினர் கையகப்படுத்தி வருகின்றனர். இது இப்போது காணி அபகரிப்பின் அடுத்த கட்டமாக இருக்கின்றது. நாட்டில் கொரோனா அபாயம், பொருளாதாரா அவலநிலை இவைக்கு மத்தியில் இரகசியமாக மக்களின் காணிகளை அபகரிக்கும் நடவடிக்கைகள் இரவோடு இரவாக நடந்தேறுக்கின்றன. இது மக்களுக்கு பெரும் அசௌகரியங்களை உண்டு பண்ணியுள்ளது.

நாட்டில் மக்களின் அன்றாட வாழ்க்கை கேள்விக் குறியாகிக் கொண்டு வரும்வேளை, அரசு எமது மக்களுக்கு சொந்தமான நிலங்களை இவ்வாறு கையகப்படுத்துதல் மிகவும் கவலையளிக்கின்றது.

வவுனியா, சமளம்குளம், கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட பாரம்பரிய கிராமங்களில் ஒன்றாகிய இத்திக்குளம் கிராமத்தின் எல்லையில் அமைந்துள்ள கல்நாட்டுகுளப் பகுதி, தமிழர்களின் பாரம்பரிய பூமியாகும். காணிகள் அளவுகளுக்கு அப்பால் இவை தமிழர்களின் பூர்வீக பூமி. இந்த இடம் தொடர்பில் ஆராய்ந்து சட்ட நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், தமிழரசுக் கட்சியின் செயலாளர் சத்தியலிங்கம் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டதோடு, கிராம அமைப்புகளையும் தொடர்பு கொண்டு, இப்பிரச்சனை தொடர்பான தகவல்களை அறிந்துள்ளனர்.

இதற்கான நடவடிக்கைகள் துரிதமாக எடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாவும், நாட்டில் மக்களின் அன்றாட வாழ்க்கை கேள்விக் குறியாகிக்கொண்டு வரும்வேளை, அரசு எமது மக்களுக்குச் சொந்தமான நிலங்களை இவ்வாறு கையகப்படுத்துதல் மிகவும் கவலையளிக்கின்றது என்றும், அன்றைய சந்திப்பில் சாணக்கியன் தெரிவித்திருந்தமையம் குறிப்பிடத்தக்கது. ஆனால், இப்போது இன்னொரு புதிய பிரச்சனை உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது வவுனியா மாவட்டத்தில் அனுராதபுரத்தின் இரு கிராமங்களை வவுனியா மாவட்டத்துடன் இணைத்து, இன விகிதாசாரத்தினை மாற்றியமைக்கும் முயற்சிதான் அது.

இந்த வேலைக்கான தீவிர முயற்சி மேற்கொள்ளப்படும் நிலையில் அதற்கான அனுமதி கோரிய பத்திரம், வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் அண்மையில் தெரிவித்தார்.




2015 இல் இருந்து 2019 வரையும் வடக்கு, கிழக்கில் இடம்பெறவிருந்த சிங்கள குடியேற்றங்கள் தடுத்து நிறுத்தபட்டிருந்தது. எனினும் 2019 நவம்பர் மாத்திற்கு பிற்பாடு வட மாகாணத்தில் வவுனியா, முல்லைத்தீவில் தென் பகுதியில் இருந்து சிங்கள மக்கள் கொண்டு வரப்பட்டு குடியேற்றப்பட்டு வருகின்றனர். வடக்கில் தமிழர்களின் விகிதாரசாத்தினை மாற்றியமைப்பதற்காக இது மிக தீவிரமாக இடம்பெற்று வருகின்றது.

இந்தக் குடியேற்றத்தினை இரண்டு வகையாக மேற்கொள்கின்றனர். ஒன்று இங்குள்ள அரச காணிகளில் தென்பகுதியில் இருந்து கொண்டு வந்து குடியேற்றுவது. மற்றையது ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு அனுராதபுரம் மாவட்டத்துடன் உள்ள கிராமங்களை, வவுனியா மாவட்டத்துடன் இணைப்பதாக உள்ளது.

அண்மையில் போகஸ்வெவ கிராமத்திற்கு ஜனாதிபதி வந்தபோது, திட்டமிட்டு கெப்பிட்டிகொல்லாவையில் உள்ள கிராமத்தில் இருந்து அனுராதபுரத்திற்கு செல்வது கடினம் எனவும், வவுனியா நகரத்திற்கு செல்வது இலகு என்பதால் தமது கிராமங்களை வவுனியாவுடன் இணைத்து விடுமாறு பிரதேசசபை உறுப்பினரொருவரால் கூறப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அண்மையில் வவுனியா மாவட்ட அபிவிருத்திகுழு கூட்டத்தில், அனுராதபுரம் கெப்பிட்டிகொல்லாவ பிரதேச செயலகத்தின் கனகவெவ என்ற கிராம சேவகர் பிரிவையும், பதவியா பிரதேச செயலகப்பிரிவில் உள்ள கம்பலிய என்ற கிராம சேவகர் பிரிவையும் முழுமையாக வவுனியா மாவட்டத்துடன் இணைப்பதற்கான அனுமதிப் பத்திரம் சமர்ப்பிக்கப் பட்டிருந்தது என கூறப்படுகிறது. ஆனாலும், இந்த இணைப்பு முயற்சி மிகத் தீவிரமாக இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றது. இந்த இணைப்பு இடம்பெற்றால் வடக்கில் சிங்கள தமிழ் மக்கள் இணைந்த மாவட்டமாக வவுனியா கொண்டு வரப்பட்டு, இலகுவாக பரவலான சிங்கள குடியேற்றங்கள் இடம்பெற வாய்ப்பு இருக்கின்றது.

ஆனாலும் குடியேற்றம் - இலங்கை மக்கள் என்ற இரண்டு வகைக்குள்ளும் இவை சட்டப்படி சாத்தியமா? அல்லது முறியடிக்க கூடியதா? என்பதை சட்டவல்லுநர்கள் கண்டிப்பாக கரிசனையுடன் தெளிவுபடுத்தி, இதற்கான அடுத்த கட்ட செயற்பாட்டில் இறங்காது விட்டால் கண்டிப்பாக இது பாரிய அபகரிப்புக்கு வழிகோலிடும்.

இயற்கை அளித்த பெரும் செல்வத்திற்கிடையில் சமூக அவல நிலை இருப்பது, இலங்கையைத்தவிர வேறெங்குமில்லை என்றுதான் சொல்ல வேண்டும். காரணம் இலங்கையில் அதிக வளம் இருக்கும் இடங்கள், அதிகார பலத்தால் கையகப்படுத்தல் என்ற போர்வையில் அபகரிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றது.

இலங்கையில் 1894 நில கையகப்படுத்தல் சட்டம் முதல்முதலாகக் கொண்டு வரப்பட்ட போது, தனி நபருக்குச் சொந்தமான நிலங்களைப் பொது நோக்கத்திற்கு, அதாவது பொது காரியங்களுக்குப் பயன்படுத்தும் பொருட்டு, அவற்றை அரசு கையகப் படுத்தத் துணை செய்ய இயற்றப்பட்டது. இச்சட்டத்தில் கூறப்படும் 'பொது நோக்கம்' என்பது கல்வி நிறுவனங்கள் அமைத்தல், பொதுக் குடியிருப்புத் திட்டங்கள், பொதுச் சுகாதாரத் திட்டங்கள், குடிசை மாற்றுத் திட்டங்கள் மற்றும் கிராமப்புறத் திட்டங்கள் போன்றவற்றைக் குறிப்பதாகும்.

'நிலம் கையகப்படுத்துதல்' என்பது தனி நபருக்குச் சொந்தமான நிலத்தை, ஏதேனும் பொது நோக்கத்திற்கு அரசு அல்லது அரசு தொடர்புடைய நிறுவனங்கள், சட்டப்படி அரசு நிர்ணயிக்கும் இழப்பீட்டை உரித்தானோருக்கு வழங்கி, அந்நிலத்தைக் கையகப்படுத்துவதாகும்.

நாடாளுமன்றத்தில் இச்சட்டத்திற்குப் பதிலாக நிலம் கையகப்படுத்துதல், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றச் சட்டம், 2013 இல் இயற்றப்பட்டுள்ளது. ஆனால், இவை சட்டங்களாக இருந்தாலும், இலங்கையில் காணி அபகரிக்கும் முறைமை முற்றிலும் மாறுபட்டதாக இருக்கின்றது.

தமிழ் மக்களின் காணிகள் கையகப்படுத்தல் முறைமையை முற்றும் முழுதாக அபகரிப்பாக மாற்றி இருக்கும் இலங்கை அரசிடம் இருந்து, எமது பூர்வீக நிலங்களை மீட்டு எடுக்க நாம் முனைவோம்.

# L-mobi mobile

top up | prices | My L-mobile | International

| Bundle | Contents | Price |
|---|---|---|
| 100MB | 50MB + 50MB Gratis | €1 |
| 256MB | 128MB + 128MB Gratis | €2 |
| 512MB | 256MB + 256MB Gratis | €3 |
| 1GB | 512MB + 512MB Gratis | €4 |
| 2GB | 1GB + 1GB Gratis | €5 |
| 3GB | 1.5GB + 1.5GB Gratis | €6 |
| 4GB | 2GB + 2GB Gratis | €6,50 |
| 5GB | 2.5GB + 2.5GB Gratis | €7 |
| 6GB | 3GB + 3GB Gratis | €7,50 |
| 7GB | 3.5GB + 3.5GB Gratis | €8 |
| 8GB | 4GB + 4GB Gratis | €8,50 |
| 10GB | 5GB + 5GB Gratis | €9 |
| 12GB | 6GB + 6GB Gratis | €11 |
| 15GB | 7.5GB + 7.5GB Gratis | €13 |

Maandelijks opzegbaar
Geen aansluitkosten
Geen BKR controle

gratis simkaart | maand bundel | jaar bundel

Action! get 2= pay 1
With an annual bundle worth 24.95
Get the 2nd SIM card for
**FREE!**

# A whole year for a fixed price!

**Reliable, affordable, accessible. For everyone.**



+31 20 363 62 31
cs@l-mobi.nl

Website : www.l-mobimobile.nl

Amstel Business Park Entrada 204,
1114 AA Amsterdam

*Available at*

JUMBO · coop · AKO · recharge.com · SENIORSTORE.NL · bp · OPWAARDEREN.NL · BELTEGOED.NL · Phone House · Primera · tele combinatie · BCC · OPTIE 1 Smart Living · SPAR · MCD mijn supermarkt



அன்புச் செல்வன்

ஏன் வேண்டும்
தனித் தமிழ் ஈழம் ?

# இலங்கை யாருக்குச் சொந்தம் ?

## தமிழருக்கா... சிங்களவருக்கா... சீனருக்கா....

எமது தமிழரின் தாயகத்துக்காக எத்தனை பேர் இரவு பகலாக கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகப் போரடி வருகிறார்கள் என்பதை, கடந்த 2009 முள்ளி வாய்க்கால் தமிழ் இனப் படுகொலை சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் வெளிப்படுத்தி வருகிறது.

சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் படையெடுப்புகள் அங்கபளி, பங்காளிச் சண்டைகளாகப் பார்த்தால், உரோமரும், அரேபியரும், பாரசீகரும், ஐரோப்பியரும் பல்லாயிரம் கடல் வழிக் கடந்து வந்து பறித்துப் போக, இது ‘பாட்டி சுட்ட வடை’யாக அவர்கள் நினைத்து விட்டார்கள். நாமோ அது யாரோ ‘பாட்டி சுட்ட வடை, காகம் சுட்ட வடை’யாக நினைத்து விட்டோமா? என இன்று நினைக்கத் தோன்றுகிறது.

ஆனால், இலங்கையின் வரலாற்றைப் பார்த்தால் எத்தனையோ தமிழ் அரசர்களும், குடிகளும் உயிரைக் கொடுத்துப் போராடி இறந்தனர் என்கிற உண்மை தெரியவரும். இந்தப் படையெடுப்புகளின் பின்னால் செயற்பட்ட கத்தோலிக்க, இஸ்லாமிய, புத்த மதங்கள் எல்லாம் எமது நாட்டின் செல்வங்களைக் கொள்ளை அடிக்கவும், தமது மதங்களுக்கு ஆட்களைச் சேர்க்கவும் அடிமைகளை உருவாக்கி, தமது நிறுவனங்களை செலவும், சேதாரமும் இல்லாமல் மனித உடல் உழைப்பைச் சுரண்டிக் கொழுக்கவும், தமிழ் மக்கள் மீது போர்களைத் தொடுத்தன.

மொத்தத்தில் உலக மக்களின் வளமான வாழ்வுக்குத் தமிழ், ஆப்பிரிக்க நீக்கிரோ மக்களின் உழைப்புதான் ஆதாரமாக இருந்தது. இத்தகையக் கருத்தை உலகில் மிகச் சிலரே உண்மை என ஏற்பர். நமது தமிழரோ கிண்டலடிக்கவே செய்வர். அந்த அளவுக்குத் தமிழ் இனம் மூளை கெட்டுக் கிடக்கிறது. எங்களின் மூளைக்கு மதிப்பளிக்கும் வேலையைச் சீன தேசத்தின் இலங்கைத் தூதுவராலய தலைவரும், உதவியாளர்களும் கடந்த 16.12.2021இல் யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமியைச் சைவ முறைப்படி வழிபாடு நடத்தி, தமது பழைய உறவை நினைவு படுத்தி, சீன



தேசத்தின் பெருமையை மிக உயர்ந்த நிலைக்குத் தூக்கி நிறுத்தி உள்ளனர்.

சென்ற 16.12.2021 வியாழக்கிழமை காரல, யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தைச் தரிசனம் செய்யச் சென்றது, இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்கொங் தலைமையிலான தூதரக அதிகாரிகளின் குழு என்கின்ற செய்திகள். எப்படிக் கம்மியூனிச நாடான சீனாவின் தூதுவர் தமிழர்களின் முருகன் கோயிலை வழிபடப் போகலாம்? என்று கேள்விகளை எழுப்புகின்றனர் அரசியல் கட்சிகளும், ஆய்வாளர்களும்.

'பானையிலே சோறு இருந்தா, பூனைகளும் சொந்தமடா' என்ற பாணியில் இலங்கை என்கிற பானை உலக அரசுகளால் அடித்துத் துவைத்து, எறியப்பட்டு வருகிறது. தமிழரிடம் இருந்து பறித்து விட மௌரிய அரசன் அசோகனும், அவனை வழி நடத்திய ஆரியரும் புத்தன் என்கிற மகானின் பிச்சைப் பாத்திரத்தோடு 2,500 வருடங்களுக்கு முன்னர் ஆண்ட அரசன் தமிழ் மன்னன், இராவணன் வழிப் பேரன் சூரத் தீசன் என்று சிங்கள அரசனாகப் பொய் வரலாற்றை, உலகின் முதல் பொய்கள் புரட்டுகளின் சிங்கள வரலாற்றுத் தொகுப்பான பாளி மொழியில் எழுதப்பட்டு வந்த மகாவம்சம் கூறுகிறது. இந்தியாவை ஆட்சி செய்த மௌரிய சக்கரவர்த்தி அசோகனின் மகன் இராணுவத் தளபதியுடன் புத்த மதத்தைப் பரப்ப வந்தானாம். மதம் பரப்ப வந்த குழுவில் அசோகனின் இராணுவத் தளபதிக்கு என்ன வேலை?

அதைக் கண்டு பயந்து தலைநகர் அநுராதபுரத்தை விட்டு ஓடி, மிகிந்தலை மலையில் ஒளித்திருந்த இலங்கை மன்னன், நாட்டை விட்டுக் காட்டில் ஆனந்தமாக பொழுதைக் கழித்த வேளையில், அசோகனின் அணி மிகிந்தலை மலையில் புத்த மதம் புகட்டி, தேவ நம்பிய திசா என்கிற புதுப் பெயருடன் தலைநகர் அநுராதபுரம் திரும்ப வந்து நல்லாட்சி நடத்தினான் என அதே மகாவம்சம் சொல்லுகிறது. அன்று அப்படி எழுதப்பட்ட



இலங்கையின் வரலாறு, இன்றும் இராணுவ அடக்கு முறையால் மீண்டும், மீண்டும் அழித்து எழுதப் பட்டே வருகிறது.

உலக நாடுகளின் வரலாறு சதியாலும், சூதாலும், போர்களாலும் வெற்றி பெற்றவர்களால் தப்பாக எழுதப் பட்டே வந்துள்ளது. எப்போதுமே கையில் பிரம்பை வைத்திருக்கும் ஆசிரியரின் பதிலே சரியானது என்பதும் பயத்தில் கை கட்டி, வாய் பொத்தி நிற்கும் மாணவனின் பதில் பிழையானது என்கிற நிலைப்பாடே உலக உண்மையாகி நிலைக்க வைக்கப்படுகிறது. இன்றும் இலங்கையின் உரிமையாளர் 'தமிழர்' என்கிற உண்மை அழிக்கப்பட்டு, சிங்களவரே அதன் பூர்வீகக் குடிகள் என்கிற புரட்டுக் காவியம் எழுதப்பட்டு வருகிறது.

2009 இல் தமிழ் இனப் படு கொலையை அடுத்து, சிங்களம் தனது மகாவம்சத்தில் புதிதாக மகிந்த ராஜபக்? ஷ என்கிற மனித குல அரக்கனின் சாதனையாக ஒரு அத்தியாயத்தை எழுதிச் சேர்த்தது. அதற்கும் உண்மையான உலக வரலாற்று நிகழ்வுகளுக்கும் ஒரு அணு அளவு உண்மை கூட இல்லை என்பது, இன்றைய சமகால மக்களுக்குத் தெரியும். ஆனால், இந்த உண்மை வருங் காலத்தில் வரலாறு பேசுபவர்களுக்குத் தெரியப் போவதில்லை.

அண்ணன் மகிந்த மகாவம்சத்தில் இடம் பெற்றதைக் கண்ட இன்றைய ஜனாதிபதி கோட்டபாயா ராஜபக்? ஷ, தானும் மகா வம்சத்தில் இடம் பெற, தனக்கு ஆதரவான பிக்குகள் கூட்டத்தை வைத்து இருப்பினும், மனிதர்களிடம் காணப்படும் குரங்குக் குணம் மாறாமலே உள்ளது. அதென்ன குரங்குக் குணம்? என

நீங்கள் கேட்க முன்னரே, சிறுவயதில் படித்த கதை பற்றி இவ்விடத்தில் குறிப்பிடுவது கட்டாமாகத் தெரிவதால், அதையும் இங்கே சொல்லி விடுகிறேன்.

ஒரு ஊரிலே ஒரு தொப்பி வியாபாரி இருந்தானாம். அவன் காடு மேடுகளை நடந்து, கடந்து சென்று தொப்பிகளை விற்பானாம். அப்படிக் காடு வழியாகப் போகும் பொழுது, ஒரு மரத்தின் நிழலில் தனது தொப்பிகளை வைத்து விட்டுத் தூங்கி எழுந்து பாரத்தால், தொப்பிகளைக் காண வில்லையாம். தேடிப் பார்த்தால் தொப்பிகளைக் குரங்குகள் தங்கள் தலைகளிலும், கால்களிலும் மாட்டி விளையாடுவதைக் கண்டானாம்.

முடிந்த வரை முயன்றும் அவனால் குரங்குகளிடம் இருந்த தொப்பிகளை மீளப் பெற முடிய வில்லையாம். கடைசியல் கோபம் கொண்டு, தன் தலையில் இருந்த தொப்பியைக் கையில் எடுத்து ‘சீ நீயும் போ’ எனத் தூர வீசி எறிந்தானாம். இதைக் கண்ட குரங்குகள் எல்லாம், தங்களிடம் இருந்த தொப்பிகளை வீசி விட்டனவாம். வியாபாரியும் எல்லாத் தொப்பிகளையும் எடுத்துக் கொண்டு வியாபாரத்தைத் தொடர்ந்தானாம்.

இதுதான் நேற்றும், இன்றும், நாளையும் உலகில் காணப்படும் சாசுவதமான உண்மை. நேற்று தமிழரின் தாயகமாக விளங்கிய ‘ஈழம்’ என்கிற இலங்கை ஸ்ரீலங்கா சோஷலிசக் குடியரசு எனச் சிங்களவரின் தாயக நிலமாக இன்று மாற்றப்பட்டு விட்டது. இன்று சிங்களவரின் தாயகமாக மாறிய ஈழம், நாளை என்னவாக மாறும்? என்பதற்கான போராட்டம் இன்று அந்த மண்ணில் சூடு பிடித்துப் பற்றி எரிகிறது.

சீனா இன்று எங்களைத் தேடி வந்தருக்கிறது. இனிமேலும் அதைக் காட்டி சிங்களம் எங்களையும், உலகத்தையும் மிரட்ட முடியாது. நாம் இதுவரை சீனாவின் கரங்களைப் பற்றத் தவறிவிட்டோம். எங்கள் தலைவர்கள் அமெரிக்கா, இங்கிலாந்து, நோர்வே போன்ற ஐரோப்பிய நாடுகளின் பின்னால் சென்ற பாவப் பலன்களைக் கண்ணாரக் கண்டு விட்டோம். போரின் பொழுதிலும் சீனா தமிழரைப் பகைத்துக் கொள்ள வில்லை. அதன் படைகள் நேரடியாகப் பங்காற்றிய செய்திகளும் கிடையாது.

இந்தியாவையும், மேற்குலக நாடுகளையும் நம்பி நாம் இழந்தவை கொஞ்ச நஞ்சம் அல்ல. சீனா எடுக்கும் எந்த முடிவையும் மீறும் துணிச்சல் சிங்களத்துக்கு இருக்க முடியாது. எனவே, நாம் சீனாவின் துணையை நாடிப் பெறவேண்டும். அதன் பின்னர் 1830இல் நாம் இழந்த எமது தனித் தமிழ்த் தாயகத்தை மீட்க வேண்டும். அதற்கான ஆதரவை சீனாவிடம் கேட்டுப் பெறுவதை யாரும் தடுக்க முடியாது. கேட்போம் சீன அதிபர் ஜிங் பிங் உதவியை.




வாடிக்கையாளர்களின்
பேராதரவுடன்
20ஆம் ஆண்டில்....
மாபெரும்
ராஜ
முத்திரை
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

# DORTMUND மாநகரத்திலே தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும் உணவுப்பொருட்களை மொத்தமாக பெற்றுக்கொள்ள நாடுங்கள்

StaR-Impex



Rabeena Since 1986 We've Mastered Taste

Aachi The Mother of Good Taste

BTM

Double Horse

Bringing Health to Life

பொருட்களை ஜேர்மனியில் மொத்தமாக விநியோகம் செய்யும் ஒரே நிறுவனம்

## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698

email : info@star-impex.de
web : www.star-impex.net

TRS ASIA'S FINEST FOODS



MDH · Laziza International · Cock Brand · Daawat The Finest Basmati · Elephant House · Shan · Akash Basmati · Rubicon · Tilda Legendary Rice

Nestlé · PG tips · Niru Brand · AROY-D · MTR · Aashirvaad · Pillsbury · Patak's Original · Laila

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

பகுதி.41

அவதானி


ஒரு மனிதனுக்குப் பல நோய்கள் ஏற்பட்டு, பல நுண்ணுயிர்க் கிருமிகளின் தாக்கத்தினால் அவன் அவதியுறும் போது, அவனின் நோய்களைக் குணமாக்க கொடுக்கப்படும் மருந்துகளினாலும், அனைத்து நோய்களுக்குமான பல்வேறுபட்ட நோய்களின் தாக்கத்தினாலும், அவன் வாழ்நாள் முழுக்க சுகதேகியற்றவனாக, தனது வாழ்வின் முன்னேற்றத்தில் கவனமற்றவனாகவும் அதற்காக உழைக்க முடியாதவனாக ஆகி இறக்கும் வரை நோயாளியாகவே வாழ்வான்.

அது போன்றதே இலங்கையின் நிலையாகும். இலங்கைக்குள் இந்திய உளவு நிறுவனம் எவ்வாறு ஊடுருவி நுழைந்து செயல்பட்டது? எனப் பார்க்கையில் பெரும் வியப்பே ஏற்படும். அவ்வாறு வியப்பு ஏற்படுகையிலும்கூட, இந்தியா எமது அண்டை நாடு, அது ஒரு போதும் எமக்குத் துரோகம் செய்யாது என்ற அதீத நம்பிக்கையை சிங்களவர்களைவிட, தமிழர்களே கொண்டிருப்பதால் அதுவே இந்தியாவின் பலமாக மாறியுள்ளது.

இந்தியா எக்காலத்திலும் இலங்கையுடன் அகத்தூய்மையாக நடந்து கொண்டது கிடையாது. வெளிப்பார்வைக்கு இந்தியா இலங்கைக்கு நிறைய உதவிகள் செய்து வருகின்றது என்று தோன்றினாலும், கடனுக்கு வட்டி வாங்குவது போன்று தனது நலன் நோக்கியே அனைத்தையும் செய்தது என்பது, இன்று மிகத் தெளிவாகவே தெரிகின்றது. அயல்நாடு என இந்தியாமீது இலங்கைத் தமிழர்கள் பற்று வைத்திருக்க, அந்தப் பற்றைத் தனக்குச் சாதகமான பலமாக இந்தியா எடுத்துக் கொண்டு, தமிழரை இலங்கை அரசிற்கு எதிரான பகடைக்காயாகப் பயன்படுத்தி வந்திருக்கின்றது என்பதை நிராகரிக்க முடியாது.

ஆரம்ப காலங்களில் கேரளா, தமிழகத்தின் செட்டிநாடு (தமிழகத்தில் வணிகத்தை கையகப்படுத்தி வைத்திருந்த செட்டிச் சமூகத்தினர் பெரும்பான்மையாக வாழ்ந்த காரைக்குடிப் பகுதி, செட்டிநாடு என்றும் அழைக்கப்பட்டிருந்தது) பகுதிகளிலிருந்து வணிக ரீதியாக தமது தொழிலை நடத்துவதற்காக இலங்கைக்கு வந்திருந்தனர்.

கேரள மலையாளிகள் ஆங்காங்கே சிறு சிறு தேநீர், சாப்பாட்டுக் கடைகள் தொடக்கம், பெரும் மொத்த வியாபாரங்களை நடத்துகின்ற வல்லமையுள்ளவர்களாக




இருந்தார்கள். அதே போல கப்பல்களிலிருந்து பொருட்களை இறக்கி, அவற்றை களஞ்சியப்படுத்தி வைக்கும் வணிகத்தைச் செட்டிமார்கள் மேற்கொண்டிருந்தனர். இந்தக் களஞ்சிய அறைகளை மண்டி அல்லது கிண்டங்கி எனவும் அழைத்தனர்.

கொழும்புத் துறைமுகத்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களை, செட்டிமார் கொழும்பில் கிண்டங்கி அமைத்துக் களஞ்சியப்படுத்தியது போல, காங்கேசன்துறையில் கப்பல் மூலம் இறக்கிய பொருட்களை காங்கேசன் துறையிலேயே களஞ்சியப்படுத்திப் பின்னர் அவற்றை லாரிகள் மூலம் இலங்கையின் பல பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தனர்.

செட்டிமார்கள் வியாபாரிகளாக மட்டுமல்ல, வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களாகவும் இலங்கையில் தமது தொழிலை நடத்தி வந்தனர். பலம் பொருந்திய உலக நாடுகளின் உளவு நிறுவனங்கள் போல இந்தியாவின் உளவு நிறுவனமும் ஒரு பலமிக்க நிறுவனமாக இந்தியாவின் நலன் நோக்கி, இந்தியாவின் ஆலோசனையுடனும் தனித்துவமாகவும் செயல்பட்டு வருகின்றது.

சிங்களவர்களானாலென்ன தமிழர்களானாலென்ன தமது நாட்டின் பாதுகாப்பும், அந்தப் பாதுகாப்புக்கு இலங்கையின் ஆட்சி சீர்குலைந்தாலென்ன, இலங்கையில் இனமுரண்பாடுகள் ஏற்பாட்டாலென்ன, பொருளாதாரம் விழ்ச்சியடைந்தாலென்ன அதைபற்றி இந்தியாவுக்கு எவ்வித கரிசனைக் கிடையாது.




Colombo, Pettah. Ceylon 1950

அதே நேரம் தனது சுயமுகத்தை இந்தியா காட்டிக் கொள்ளக் கூடாதென்பதற்காக, இலங்கைக்குப் பல்வேறுபட்ட உதவிகளைச் செய்து கொண்டேயிருக்கும். இனமுரண்பாடு, பெரும் அரசியல் முரண்பாடாக வளர வேண்டுமென்பதற்காக நீண்டகாலத் திட்டமிடலுக்கமைய இந்தியாவால் ஏற்படுத்தப் பட்டதே இனக் கலவரங்களாகும்.

இனக் கலவரங்களை நடத்துவதற்கு இந்திய உளவு நிறுவனத்திற்கு உதவி செய்தவர்கள், தானாடா விட்டாலும் தசையாடும் என்பது போல, இந்தியர்கள் என்ற ரீதியில் உளவுத் தகவல்களை வழங்கியவர்களில் முக்கியமானவர்கள் மலையாளிகளும், செட்டிமார்களுமே!.

இலங்கையின் அரசியல் நிலைநிறுத்தத் தன்மையைச் சீர்குலைப்பதே இந்தியாவின் உள்நோக்கமென்பதை, இலங்கையர்கள் உணர்ந்த போதும், தம்மையறியாமலே அவர்களின் சதிவலையில் விழுந்து எண்ணிறந்த ஆண்டுகளாகி விட்டன.

இந்தப் பொருளாதார இலக்கைத் தமது கையிலெடுத்து, வளர்ந்து கொண்டிருந்த இலங்கையைத் தாயகமாகக் கொண்ட இலங்கை வணிகர்களையும், வியாபாரிகளையும் அடிமட்டம் வரையும் இல்லாதொழிக்க வேண்டுமென்பதற்காக இந்திய உளவு நிறுவனத்தால் ஏற்படுத்தப் பட்டதே தமிழர்கள் மீது ஏவிவிடப்பட்ட இனக்கலவரங்களாகும்.

அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

இந்த இனக்கலவரத்தில் உயிர்ச்சேதம், உடமைச் சேதம் உட்பட வணிக வியாபார நிறுவனங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டதே இலங்கைத் தமிழர்களுடையதுதான்.

இதற்குப் பின்னால் இருந்தவர்கள் செட்டிமார்களும், மலையாளிகளுமே. வெளிப்படையாக இவ்வினக்கலவரங்கள் யாவும் சிங்கள மக்களாலும், இனவெறி அரசியல்வாதிகளாலும் என பொது அபிப்பராயத்தை இலங்கைத் தமிழர்கள் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவின் உதவி என்பது, ஏற முயற்சிக்கும் ஒருவனுக்கு, அவனை ஒரு கையைக் கொடுத்து ஏற உதவி செய்வதும், அதே வேளை இன்னொரு கையை காலால் அமத்திப் பிடிக்கும் தந்திரத்தைக் கொண்டதாகவே இருந்தது. இந்தியாவின் இலங்கை மீதான அக்கறை என்பது, தாமரை இலைத் தண்ணீர் போன்றதே.

இனமுரண்பாடு, பொருளாதார நலிவு போன்றவற்றைத் தனது உளவு நிறுவனத்தின் மூலமாக நகர்த்திய இந்தியா, இலங்கைத் தன்னையே எதற்கும் நாடி நிற்க வேண்டும் என்பதற்காக, இலங்கை முழு மூச்சுடன் எழுந்திருக்க முடியாதளவிற்கு பெரும் சூழ்ச்சியைச் செய்தனர். இலங்கை இனப்பிரச்சினைக்காகத் தீர்வுகளை இந்தியா தவிர்ந்த எந்த நாடு கொண்டு வந்தாலும், தமது ஆலோசனையில்லாமல் அவற்றை நடைமுறைப்படுத்த முடியாத தடைக் கல்லாக இந்தியா தொடர்ந்து இருந்து வருகிறது.

இலங்கையில் இனமுரண்பாடுகளையும், இனவாத போக்கினையும் மேன்மேலும் வளர்த்து விடுவதற்காகப் போராளிக் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்து, இலங்கைக்கு அனுப்பி வைத்த இந்திய உளவு நிறுவனம், அதே நேரம் தனக்கான ஒற்றர்களைப் போராளிக் குழுக்களுக்குள் இருந்தே தேர்வு செய்து அனுப்பியும் வைத்தார்கள்.

(தொடரும்)



பாகம் : 23

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்



இக்கட்டுரைத் தொடரை எழுதும் பொழுது நான் உணர்ந்த ஒரு ஆச்சரியமான விடயம் என்னவென்றால், இன்று நாம் எதிர்நோக்கும் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான உத்திகள் பெரும்பாலும் புலிகளின் உத்திகளுக்குள்ளே மறைந்திருக்கின்றன என்பதுதான். இது ஏனென்றால் புலிகளின் உத்திகள் என்பது அடிப்படையில் சிக்கலமைப்பிற்கான *(complex systems)* உத்திகள். இதைவிட சிறந்த உத்திகள் இன்றைய உலகில் வேறு இல்லை என்றே சிக்கலமைப்பிற்கான ஆராய்ச்சிகள் கூறுகின்றன. புலிகள் இவ்வுத்திகளைப் போரில் பயன்படுத்தினார்கள்; நாம் அதை மாற்றி, போரற்ற இன்றைய சூழலில் பயன்படுத்த வேண்டும். அது மட்டும்தான் வித்தியாசம். இனி சிக்கலமைப்பு உத்திகளை எவ்வாறு இன்றைய காலகட்டத்தில் பயன்படுத்தலாம் என சுருக்கமாகப் பார்ப்போம்.

1. ஒரு சமூகம் பேரிடரைச் சந்தித்தபின் அதிலிருந்து கற்று, தன்னை மறுசீரமைத்து, முன்பைவிடப் பலமடங்கு பலம்பெற வாய்ப்பு ஏற்படுகிறது. சமூகங்கள் இவ்வாறான வலுகூட்டலை வரலாற்றுக் கற்பிதங்களின் *(narrative)* வழியாகவே மேற்கொள்கிறது. உதாரணமாக சப்பானியர்கள், யூதர்கள், மேற்குலகம்



பலம்வாய்ந்த நாடுகளாக இவ்வாறுதான் மாறியது. தமிழ்ச் சமூகமும் அவ்வாறு முன்னைவிட பலம்வாய்ந்த தேசமாக மாறுவதற்கு, ஒரு வாய்ப்பு அமைந்துள்ளது. அவ்வாறான மறுசீரமைப்புக்குத் தேவையான பலம் வாய்ந்த, முன்னேற்றகரமான, யாருக்குமே கிடைக்காத கற்பிதங்களைப் *(narrative)* புலிகள் உருவாக்கி வைத்திருக்கிறார்கள். இதுதான் அவர்களின் மாபெரும் கொடை. அவ்வாறான மறுசீரமைப்பை நோக்கிச் செயல்படுவது முதன்மையான செயல்பாடாக இருக்கவேண்டும்.

2. நமது வெற்றி என்பது நாம் எதிர்நோக்கும் சூழலுக்கு ஏற்ப கற்று, பல்வேறு சிக்கலான அமைப்புகளை உருவாக்கி, அவற்றை இணைத்து இயக்கி, வாய்ப்புகளைப் பெருக்குவதை நம்பியே உள்ளது. அவ்வாறு இல்லாமல் நாம் ஒரே ஒரு உத்தியைத் தேடிக் கொண்டிருந்தால், அது சிங்களத்தின் செயசிக்குறு நடவடிக்கை போன்று படுதோல்வியில் முடியும். நமது சிக்கல் தன்மையைக் கூட்டுவதை மையமாக வைத்தே நமது செய்லபாடுகள் இருக்க வேண்டும். அதற்கு ஒரு உத்தி என்றில்லாமல், பல்வேறுபட்ட உத்திகளைக் கையாள வேண்டும்.

4. சமூகத்தைப் பல்வேறு அமைப்புகள் இணைந்து செயல்படும் ஒரு எந்திரமாகப் பார்க்க வேண்டும். நமது இலக்கை அடைய எது போன்ற எந்திரங்கள் தேவையோ, அதை உருவாக்குவதுதான் நமது கடமை. மக்களையோ அல்லது ஒரு தலைவரையோ பிழை சொல்லிக் கொண்டிருந்தால், முன்னேற்றம் ஏற்படப் போவதில்லை. நீண்டகால அரசியல் அனைத்தும் அமைப்பு ரீதியானவை என்பதை நாம் முதலில் அறியவேண்டும். *(All long term politics are institutional)* அவ்வாறான சிக்கலான அமைப்புகளை உருவாக்குவதற்கு பலமான ஒத்துழைப்பான பண்பாடு தேவை. இன்றைய நண்டுப் பண்பாட்டை வைத்து, நம்மால் எந்த ஒரு உருப்படியான அமைப்பையும் உருவாக்க முடியாது. இதற்கானத் தீர்வைப் புலிகள் ஏற்கனவே கண்டுபிடித்து விட்டார்கள். அதுதான் அதியுயர் ஒத்துழைப்பான புலிப்பண்பாடு. இன்றைய பொதுச் சமூகத்திற்கு ஏற்றவாறு புலிப்பண்பாட்டை மாற்றி, மக்களை அதியுயர் ஒத்துழைப்பான சமூகமாக மாற்றவேண்டும். இதை மறுசீரமைப்பின் ஒரு முக்கிய பாகமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.



5. சிக்கலான அமைப்புகளை உருவாக்குவதற்கு அறிவு *(knowledge)* அடிப்படையானது. நமக்கு எப்பொழுதும் முழுமையான அறிவு இருக்கப் போவதில்லை. அதனால் நாம் தொடர்ந்து சோதனை செய்து, கற்று அறிவை வளர்த்துக் கொண்டு செல்ல வேண்டும். அதற்கேற்ற ஆராய்ச்சி அமைப்புகளை உருவாக்க வேண்டும். நவீன உலகத்தின் பரிணமாத் தத்துவம் என்பது "அறிவுடையது வெல்லும்". புலிகள் அறிவில் எதிரிகளைவிட முன்னோடிகளாக இருந்ததால்தான் வெற்றி பெற முடிந்தது.

6. வித்தியாசமான, புதிரான, நம்ப முடியாத, துணிவான கருத்துகளுக்கும், திட்டங்களுக்கும் செவிமடுக்க வேண்டும். வரலாற்றில் அது போன்றவைதான் மனித குலத்தை முன்னுக்கு இழுத்துச் சென்றிருக்கிறது. புலிகள் ஆரம்பித்த பொழுது "சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது" என்றுதான் கிண்டலடிக்கப் பட்டார்கள். முடிவில் அவர்கள் சாதித்ததை நவீன தெற்காசிய வரலாற்றில் இதுவரை

யாரும் சாதிக்கவில்லை. பழைய அலுத்துப்போன, வேலை செய்யாத உத்திகளில் ஆற்றலை வீணடிக்கக்கூடாது. இருப்பதிலேயே மோசமான தவறு என்பது நாம் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்பது தெரியாமலே செல்வதுதான்.

7. அமைப்புகளை கீழிருந்து மேலாக, சூழலுக்கேற்ப அடுக்கடுக்காக சிக்கனத்துடன் பரிணமிக்க வேண்டும். சிக்கலான அமைப்புகளை மேலிருந்து கீழாகத் திட்டமிட்டுக் கட்டமுடியாது. 'புலிகளின் பலம் ஒரு புலிவீரனின் நெஞ்சுரத்திலிருந்து பிறக்கிறது'. அவ்வாறு பலமான உறுப்பினர்களை வைத்து, படிப்படியாக கீழிருந்து பல்வேறு பிரிவுகளை உருவாக்கி, அடுக்கடுக்காக ஒரு அமைப்பு உருவாக்கப் படுகிறது. ஒவ்வொரு பிரிவும் சிக்கனமாக தேவைக்கேற்ப இயங்கி, இயக்கத்தின் மொத்த வாய்ப்புகளை பெருக்கும்படி உருவாக்கப்பட வேண்டும். புலிகள் கீழிருந்து மேலாக கட்டப் பட்டவர்கள். எதிரிகள் மேலிருந்து கீழாக கட்டப்பட்டவர்கள். புலிகளின் வெற்றிக்கு இதுவும் ஒரு காரணம்.

8. அமைப்புகளைப் பரிணமிப்பதில் அமைப்புகளுக்கிடையே போட்டிகளை உருவாக்க வேண்டும். அவற்றில் சிறந்த அமைப்புகள் பரிணாமத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பெரிதாக வளரும். ஒரு அமைப்பு அழிந்தாலும் இன்னொரு அமைப்பு அவ்விடத்தை நிரப்பும். ஒரே ஒரு அமைப்பு என்று செயல்பட்டால் அதன் இழப்பை ஈடுகட்டுவது கடினம். நமது உடலில் பல பாகங்கள் இரட்டிப்பாக இருப்பது இதனால்தான். பரிணாமம் இயற்கையிலே திடத்தன்மையை உருவாக்கும். புலிகள் ஒரு பரிணாம இயக்கமாக இருந்ததால்தான் பலமுடன் இருந்தார்கள்.

ஆரம்பத்தில் பல்வேறு ஆயுதக் குழுக்களுக்கிடையேயான போட்டியே புலிகளைச் செதுக்கி, பெரிய இயக்கமாக வளர்த்தது. ஒரு நாட்டுக்கு ஒரு இராணவம் தான் இருக்கமுடியும் என்பதால்தான் ஆயுதப்போராட்டம் முடிவில் ஒரு அமைப்பாக பரிணமித்தது.

9. இலக்கை 100% உறுதியாக அடைவதற்கான உத்திகளை யாராலும் வகுக்க முடியாது. அதனால் இலக்கை நாம் நம்பிக்கையுடன் தான் அணுகமுடியும். நம்மால் முடிந்தவரை பகுத்தறிந்து, அனைத்து அறிவையும் உள்ளடக்கி திட்டமிட வேண்டும். அதே நேரம் மாறும் சூழலுக்கே ஏற்ப தொடர்ந்து கற்று, உத்திகளைச் சீர்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும். நம்பிக்கை என்பது இலக்கை அடைவதற்கான மன உறுதியை அளிக்கும். பகுத்தறிந்த செயல்பாடுகள் இலக்கை அடைவதற்கான வழிகளை உருவாக்கும். புலிகள் அசைக்க முடியாத நம்பிக்கையையும், பகுத்தறிந்த செயல்பாடுகளையும் இணைத்து செயல்பட்டதனால்தான் பல வெற்றிகளைப் பெறமுடிந்தது.

10. இன்றைய சூழலில் ஈழத்தை நேரடியாக அடித்துப் பிடிக்க முடியாது. யூதர்கள் முதலில் ஒற்றுமையான மக்களாக உருவாகி, உலகிலே சாதனையாளர்களாக மாறி, பலம்பெற்ற பின்னர்தான் நாடு அமைக்க முடிந்தது. நாம் எவ்வாறு ஒற்றுமையான சாதனைப் படைக்கும் சமூகமாக மாறுவது? நமது அடையாளத்தை, மொழியை எப்படி காப்பது? பிறப்பு விகிதத்தை எப்படி கூட்டுவது? நமது பூர்வீக நிலங்களை எப்படி பறிபோகாமால் பாதுகாப்பது? என்று பல திசைகளில் செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது. இச்செயற்பாடுகள் ஒன்றை ஒன்று பலப்படுத்துவது.

நாம் இவ்வாறு ஈழத்தை நோக்கி எங்கெல்லாம் வாய்ப்புகள் இருக்கிறதோ, அங்கெல்லாம் காய்களை நகர்த்தி, படிப்படியாக சிக்கலான அமைப்பாக வளர்ந்து, சுற்றி வளைத்து வாய்ப்பு அமையும் பொழுதுதான் வீழ்த்த முடியும். நாம் போக வேண்டிய பாதைப்

படிப்படியாகப் புலிகளைப் போன்று பரிணமிக்கும். அதை முன்கூட்டியே அறிய முடியாது, திட்டமிடவும் முடியாது.

11. மனிதனின் பகுத்தறிவுதான் அவனை செயல்படுத்தும் காரணி என்று பொதுவாக பலரும் கருதுகின்றனர். ஆனால், இது பிழையான பார்வை. மனிதனின் பகுத்தறிவு அவனது உணர்வுகளுக்கு அடிமை என்று அண்மைய ஆராய்ச்சிகள் கூறுகின்றன. உணர்வுகள் இல்லாமல் மனிதனின் பகுத்தறிவுகூட வேலை செய்யாது. புலிகளின் மனபலத்தில் உலகில் நிகரற்ற படையை உருவாக்க முடிந்ததற்குக் காரணம் உணர்வுகள்தான். மக்களிடம் அவ்வாறான உணர்வுகளை உருவாக்குவது முக்கியம். உணர்வுகள் பெரும்பாலும் வளரும் வயதில் உருவாவதனால், அதற்கேற்றவாறு கல்வி, பண்பாட்டு அமைப்புகளைச் சீரமைப்பது முக்கியமானது. வளர்ந்து இருபது வயதிற்கு மேலான பின்பு, உணர்வுகளை உருவாக்குவது கடினமானது.

12. ஒரு நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் வரலாறு முக்கிய பங்கு வகிக்கிறது. ஒவ்வொரு சமூகமும் தனது எதிர்காலத்தை வரலாற்றின் சாயலிலேதான் அமைக்க முற்படுகிறது. புலிகள் யாருக்கும் இல்லாத நிகரற்ற வரலாற்றைப் படைத்திருக்கிறார்கள். அவற்றை முழுவதுமாக ஆவணப் படுத்துவது அதிமுக்கியமானது. அதை ஒவ்வொரு குழந்தைக்கும் கற்பிப்பது அதைவிட முக்கியமானது. அதனால் அதற்கேற்ற பண்பாட்டு அமைப்புகளை உருவாக்க வேண்டியது முக்கியம் பெறுகிறது.

ஒவ்வொரு தமிழருக்கும் என்று புலிகளின் வரலாறு தெரிகிறதோ, என்று ஒவ்வொரு வீடும் மாவீரர் நாளில் வணக்கம் செலுத்துகிறதோ, அன்று தமிழின விடியல் வெகுதூரம் இருக்கப் போவதில்லை. இது எதிரிகளுக்கும் தெரியும். அதனால்தான் புலிகளின் வரலாற்றை மறைக்க, முழு மூச்சில் செயல்படுகிறார்கள். அவர்களின் கல்லறைகளை இடித்தார்கள், போரில் அழியாத பதுங்கு கட்டிடங்களை வெடி வைத்து தகர்த்தார்கள், தலைவர்களின் உடல்களை மறைத்தார்கள், ஐயா நெடுமாறனின் நூலை எரிக்க நீதிமன்றம் உத்தரவிடுகிறது. புலிகள் பற்றிய திரைப் படங்களுக்குத் தடை இடுகிறது. அவர்கள்




அஞ்சுவது புலிகளின் வரலாறு என்ற மாபெரும் ஆயுதத்திற்குத்தான். புலிகளின் வரலாற்றை மறைக்காமல், அவர்களால் தமிழரை அடிமைப்படுத்த முடியாது.

*13.* எதிரிகளின் ஆற்றலை உறிஞ்சி, நாம் பலம் பெறுவது ஒரு முக்கிய உத்தியாக இருக்க வேண்டும். புலிகளின் பெரும்பாலான ஆயுதங்கள் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டவையே.

*14.* இறுதிப் போரை தோல்வி என்று எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. கிரேக்கர்களின் தெர்மாப்பிளையோ அல்லது யூதர்களின் மாசாதவோ தோல்வி என்று பதியப்படவில்லை. அவை மகத்தான வெற்றிகளாகவே பதியப்பட்டுள்ளன. இதுபோன்ற நிகழ்வுகள் காலம் முழுதும் எதிரொலித்து, ஒரு இனத்தைக் காத்து இயக்கும் வல்லமை கொண்டது. அதனால் நந்திக்கடலின் எதிர்கால விளைவுகளைக் கருத்தில் கொண்டு, அதை ஒரு மகத்தான வெற்றியாகவே பதியப்படவேண்டும். இந்த வெற்றி மனநிலையே நம்மை அடுத்த கட்டத்திற்கு நம்பிக்கையுடன் நகர்த்தும் உந்து சக்தியாக இருக்கும். எவ்வாறு கிரேக்கர்களும், யூதர்களும் மீண்டார்களோ, அதுபோன்ற மீட்சிக்கு வழிவகுக்கும். இவ்வுலகில் போரிட்டு அழிந்த இனங்களைவிட, போரிடாமல் அழிந்த இனங்கள்தான் மிக அதிகம். போர்தான் ஒரு தேசத்தின் ஆன்மாவையே உருவாக்குகிறது என்கிறார் புகழ்பெற்ற தத்துவமேதை ஏகல்.

புலிகள் எவ்வாறு பல வெற்றிகளைப் பெற்றார்கள்? என்று பலகாரணிகளை அடுக்கினேன். ஆனால், பிரபாகரன் அவர்களை அவற்றில் உள்ளடக்கவில்லை. ஏனென்றால் இவற்றை உருவாக்கியதே அவர்தான். பிரபாகரன் போன்ற ஒரு ஆளுமை இனி எவ்வளவு காலமானாலும் கிடைக்கப் போவதில்லை. பிரபாகரன் போன்ற தலைமையை எப்படி உருவாக்குவது? என்பதை எந்த அறிவியல் தத்துவத்தாலும் கூற முடியாது. இதுபோன்ற நிகழ்வுகளை ***Black swan*** என்கிறார் நசீம் தலீபு.

பிரபாகரன் அவர்கள் சித்தாந்தம், பண்பாடு, சட்டம், ராணுவ தந்திரங்கள், படைத் தலைமை, நாட்டின் தலைமைப் பொறுப்பு, உலக அரசியல் எனப்




பலதுறைகளைக் கட்டி ஆண்ட ஆளுமை. மற்ற பெரும் தலைவர்கள் ஏதாவது ஒன்றையாவது வெளியிலிருந்து கடன் வாங்கி இருப்பார்கள். உதாரணமாக லெனின், மாவோ ஆகியோர் மார்க்சிடம் இருந்து சித்தாந்தத்தை, பண்பாட்டை கடன் வாங்கினர். நான் அறிந்த வரையில் பிரபாகரனைப் போல இவ்வாறு அனைத்திலும் ஆளுமை செலுத்தியவர் இருவரே. ஒருவர் சுபார்ட்டாவின் இலைக்கர்கசு, இன்னொருவர் முகம்மது நபிகள்.

பிரபாகரன் போன்ற தலைமை நமக்கு இனி கிடைக்கப் போவதில்லை. ஆனால், நாம் மனம் தளரத் தேவையில்லை. நபிகளின் காலத்தில் அரேபியா பொற்காலம் காணவில்லை, மாறாக அவரின் மறைவிற்குப்பின் வந்த தலைமைகளைப் பொற்காலம் படைத்தனர். சுபார்ட்டவும் அவ்வாறே. நபிகள் போன்ற தலைமைகள் என்ன செய்கிறார்கள் என்றால், நாட்டிற்கு ஒரு பலமான அடித்தளத்தை அமைத்து, போக வேண்டிய பாதையையும், வழிமுறைகளையும் உருவாக்கி விடுகிறார்கள். அவர்களுக்குப் பின்வரும் தலைமைகள் அதைப் பின்பற்றி பெரும் வெற்றிகளைப் பெறுகிறார்கள். இவ்வாறுதான் நாம் பிரபாகரனைப் பார்க்கவேண்டும்.

பொதுவாக இதுபோன்ற மாபெரும் ஆளுமைகளைப் பற்றி கூறப்படுவது என்னவென்றால் “அவர்கள் சரியான நேரத்தில் தோன்றுவார்கள், சரியான நேரத்தில் மறைவார்கள்”. நாம் பெரிதாக கலங்கத் தேவையில்லை. நாம் மாபெரும் தேசம் படைக்க என்ன தேவையோ, அதற்கான மிக பலமான அடித்தளத்தை பிரபாகரன் படைத்து விட்டார். இனி மிச்சம் இருப்பதைக் கட்டி முடிப்பது மட்டுமே நமது வேளை.

இங்கு ஒன்றை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பிரபாகரனின் பாதை என்பது மதங்களைப் போல குருட்டுத் தனமாகப் பின்பற்றுவது கிடையாது. பகுத்தறிந்த செயல்பாடுகளையும், நம்பிக்கையையும் கலந்த பாதை.

இனி நாம் என்ன செய்யவேண்டும்? என்பதைச் சுருக்கமாகக் கூறினால் “நமது சூழலுக்கேற்ற சிக்கலான அமைப்புகளைக் கட்டி எழுப்பவேண்டும்”. நாம் பார்த்த அனைத்து உத்திகளும் அடிப்படையில் இதை நோக்கியதே. நாம் எதிரியைத் தோற்கடிக்க அவர்களைவிட சிக்கலான அமைப்பாக நாம் இருக்கவேண்டும். இதைப் பயன்படுத்திதான் புலிகள் வெற்றி கொண்டார்கள். நாம் பயணிக்க வேண்டிய பாதையும் இதுதான்.

புலிகள் இவ்வுத்திகளை இராணுவ அமைப்பிற்கு பயன்படுத்தினார்கள். நாம் அனைத்துத் துறைகளிலும் பயன்படுத்த வேண்டும். புலிகள் வகுத்தப் பாதையைக் கொண்டு, நாம் இழந்ததை மட்டும் மீட்கப் போவதில்லை. தமிழ்ச் சமூகத்தின் சாதி பாகுபாடுகளை ஒழித்து, சமூகத்தை மறுசீரமைத்து, சிக்கலான அமைப்புகளைக் கட்டி எழுப்பி, உலகில் அனைத்துத் துறைகளிலும் மாபெரும் சாதனைகள் நிகழ்த்துவோம். அதற்கான வலிமை புலிகளின் வரலாற்றிற்கு உண்டு. அவ்வரலாறுதான் புலிகள் நமக்கு விட்டுச் சென்ற மாபெரும் கொடை.




# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்



“உளம் திறக்கும் உண்மைகள்...” என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

### நல்லவன்

பொய் சொல்பவனும்
சந்தர்ப்பவாதியும்
தொடர்ந்து
வெற்றி பெறும்
உலகில்
கடவுளையும்
உண்மையையும்
தேடித்தேடி
களைத்துப்போகிறான்
நல்லவன்......

### எதிர் கொள்ளல்

உண்மையை
எதிர் கொண்டால் மட்டுமே
ஒரு நடவடிக்கை
எடுக்க முடியும்
உண்மையை தவிர்க்கும் போது
நிலைமை மிக மோசமாகும்
அது மீண்டும் வந்து
காலைச் சுற்றிக்கொண்டு விடும்
தவிர்க்கிறாய் என்பதற்காக அது
உன்னை விட்டு போகாது நீ
எதிர் கொள்ளாமல் தவிர்க்கும்
ஒவ்வொரு விடயமும்
வருங்காலத்தில் நான்
அப்படி செய்திருக்கலாம்
இப்படி நடவடிக்கை
எடுத்திருக்கலாம்
இவ்வாறு
செய்யாமல் விட்டிருக்கலாம்
எனும் ரூபங்களில்
உன் முன்தோன்றி
உன்னை வாட்டி வதைக்கும்.....

● பாமினி

### நிலா..

வான வெளியில்
நட்சத்திரங்களுடன்
பவனி வரும் நீ - நான்
உன்னை பார்க்கையில்
முகில்களுக்கு இடையில் ஓடி
ஒழிகிறாய்.
நான் குனிந்ததும் மறுபடி
எட்டி பார்க்கிறாய்.
நாணத்தால் நின் வட்டமுகம்
சிவந்த மாயம் என்னவோ?!!

### தனிமை...

கார் முகில்கள் சூழ்ந்த வானம்
பச்சைப் பசேல் களனிகள்
தெளிந்த நீர் அருவி
மலை முகடுகள் மர இணைகள்
நடுவில் நான் மட்டும்


### மௌனம்...

பேச்சு தேவையே இல்லாத
நிலையிலும் பேசிப் பயனில்லை
என உணர்கின்ற வேளையிலும்,
உண்மையை உரக்கப் பேச
தேவையில்லை.
அதுவே வெளிவரும்
எனும் வேளையிலும் மௌனம்.

### காதல்...

அன்பே! என் கண்ணில் வீழ்ந்து,
இதயத்தில் நுழைந்து,
உயிரில் கலந்து - என்னை
அழகாக்கிறது உன் அழகிய காதல்.

● கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன்
யாழ்ப்பாணம்



# அகர கவிக்களம்....



## பிடி!..
சட்டியிலும், பானையிலும்,
கதவுக் கை பிடியிலும்
கொரோனாக் கிருமிகள்
எங்கே?.. எப்படிப் பிடிப்பது!..

## வரிசை!..
உணவுக்கும்,
தண்ணீருக்கும் வரிசை
வங்கியிலும்,
கடையிலும் வரிசை
மருந்துக்கும்,
ஊசிக்கும் வரிசை – அருகே
மதுக்கடையிலும்
நீண்ட வரிசைதான்!..

## அவமானம்!..
நல்லது செய்ததை மறந்த
நன்றி கெட்ட மனிதரை,
'நாய்' என்று திட்டாதீர்
நாய்களுக்கு அவமானம்!..


## சமுத்திரம்!..
சாதிச் சாக்கடையில்
கறைபடியாத பிஞ்சுகளும்
கறைபட்டுப் போனது
மானிட சமுத்திரத்தில்!..

● **வைரமுத்து சிவராசா,**
**யேர்மனி**

## நட்பு
ஒரு உடலில் இரு உயிர் நட்பு
உலகத்தின் உயிர் மூச்சு நட்பு
நட்பு என்ற மூன்றெழுத்தில் உள்ளது
உண்மை அன்பின்
இரு உயிரின் உயிர் மூச்சு.

## நட்பின் துரோகம்
நம்பிக்கை வைத்துப் பழகிய
ஒரு சில உறவுகளின்
உண்மை சுயரூபம்
தெரிய வரும்போதுதான் புரிகிறது
இவர்களையா நாம் உயிருக்கு மேல்
நேசித்தோம் என்று..!

● **நந்து**



கல்லெறி வேலுப்பிள்ளை

# "என்ன கொடுமை சரவணா!"



## வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?

**நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ. இந்தவருசத்தின்ர முதலாவது மாதமும் வேகமாப் போட்டுது பாருங்கோ. கலிகாலம் இது எண்டுறது உண்மைதான் போல இருக்குது. ஏனெண்டா பாருங்கேர் கலிகாலத்தில நேரம் வேகமாப் போகுமாம் கண்டியளோ. அதனாலதான் நேரம் வேகமாகப் பறக்குது பாருங்கோ.**

இப்பிடியான கலிகாலத்தில, யாரும் மற்றவன் என்னசெய்யுறான் எண்டதைக் கவனிக்கிறதில்ல பாருங்கோ. ஏனெண்டால்; சொந்தவேலையையே கவனிக்க நேரமில்லாட்டில் எப்பிடி மற்றவன் என்ன செய்யுறான் எண்டதை பாக்குறது கண்டியளோ.

அதனாலதான் ஒருத்தர் செய்யுறத்தைக் கவனிக்கவேணுமெண்டுதான் காவல்துறை இப்ப ஒளிப்பதிவுக்கருவிகளை எல்லா இடமும் பூட்டி வைச்சிருக்கு பாருங்கோ. ஆனால் அதையும் மீறி குற்றங்களும் திருட்டுகளும் நடந்துகொண்டுதான் இருக்கு கண்டியளோ. என்னதான் கண்காணிப்புக் கருவிகளைப் பூட்டிவைச்சாலும், திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது எண்டது தான் உண்மை பாருங்கோ.

ஆனாலும் பாருங்கேர் ஒருத்தன் நல்லாத் திருடுறான் எண்டு தெரிஞ்சுகொண்டும் அவனைத் திருத்த முடியாமலும், அவனிட்ட இருந்து விலக முடியாமலும் சிக்கித் தவிக்கிற கூட்டமும் இஞ்ச இருக்கு பாருங்கோ. இதுக்கு என்ன காரணம் எண்டு நினைக்கிறியள்? எல்லாம் புகழ் மோகமும் ஆசையும் தான் பாருங்கோ. சரி அதிகம் பீடிகை போடாமல் நேர விசயத்துக்கு வாறன் கண்டியளோ.

ஐரோப்பிய நாடுகளிலையும் அமெரிக்க நாடுகளிலையும் இப்ப தமிழ்ப் பிள்ளையள் தமிழ் படிக்குதோ இல்லையோ, தமிழில பாடாமல் இருந்ததில்லை பாருங்கோ. இசை மோகம் அந்தளவுக்கு எல்லாரையும் ஆட்டிப் படைக்குது. ஆனால் அதில ஒரு குற்றமும் இல்லை கண்டியளோ. தமிழில பாட்டுப் பாடுறது, தமிழ்ப்பாட்டுக்கு நடனமாடுறது எல்லாம் அவசியம் இருக்க வேணும் பாருங்கோ. ஏனெண்டால் அப்பதான் மேலும் மேலும் பிள்ளையள் தமிழைக் கற்றுக்கொள்ள வசதி இருக்கும் பாருங்கோ. தமிழ்ச் சொற்களை இலகுவாகப்

புரிந்துகொள்ளவும், தமிழை உச்சரிக்கவும் தமிழிசை மிகவும் அவசியமானது பாருங்கோ.

ஆனால் இப்ப வாற பெரும்பாலான பாடல்களில முக்கால்வாசி ஆங்கிலச் சொற்கள் நிரம்பிக் கிடக்கிறதால அதையும் முழுசா வரவேற்க முடியாது. ஆனால் முழுதும் தமிழ்ச் சொற்கள் நிரம்பிய பாடல்கள் எங்க கிடைக்கும் எண்டு தேடினால் அது தமிழீழ விடுதலைப் பாடல்களும், கோயில்களுக்காகப் பாடப்படுற பாடல்களும் தான் கண்டியளோ. ஆனால் இஞ்சதான் நான் சொல்லப்போற விசயம் இடிக்குது பாருங்கோ.

என்னுடைய நண்பர் ஒருத்தரின்ர மூத்த மகளுக்கு இசையார்வம் அதிகம் கண்டியளோ. அதிலையும் தமிழ்ப்பாடல்கள் எண்டால் நல்ல விருப்பம் பாருங்கோ. அவாவுக்கு எப்பிடியாவது ஒரு இறுவட்டில தன்னுடைய குரலில் ஒரு பாடல் வரவேணும் எண்டு ஆசை கண்டியளோ. பாடுற பிள்ளைக்கு இப்படி ஆர்வம் வாறது தவிர்க்க முடியாதுதானே பாருங்கோ. அப்பிடியிருக்க, கோயில் ஒண்டுக்காக இறுவட்டு வெளியிடப் போறம், நீங்கள் பாடுறீங்களோ எண்டு ஒருத்தர் வீடுதேடி வந்திருக்கிறார் பாருங்கோ.

ஏற்கனவே இசையார்வம் உள்ள பிள்ளைக்கு அதுவும் தேடி வாற வாய்ப்பைத் தவறவிடுமோ, இல்லைத்தானே. பிள்ளையும் ஆர்வமாக ஓம் எண்டு சொல்லிப்போட்டுது கண்டியளோ. பிள்ளை தன்னுடைய வளர்ச்சிக்காக ஆசைப்படுற விசயத்தில் எந்தப் பெற்றோரும் குறுக்க நில்லாயினை தானே. அதே மாதிரி என்னுடைய நண்பரும் அவரின்ர துணைவியாரும் பிள்ளை விரும்புற மாதிரி ஒரு வாய்ப்பு வந்திருக்கு எண்டு சொல்லி சந்தோசமா பிள்ளையைப் பாட அனுமதிச்சிருக்கினம் பாருங்கோ.

பாட்டுப்பாட முதல், நீங்கள் கோயிலுக்கு ஏதாவது உதவி செய்ய விரும்பினால் நீங்கள் செய்யலாம் எண்டு வந்தவர் கேட்க, சரி பிள்ளைக்குப் பாட வாய்ப்புக் குடுத்த கோயில்தானே எண்டுசொல்லி என்ர நண்பரும் கொஞ்சக் காசு உதவி செய்யலாம் எண்டு சொல்லி காசும் குடுத்துப்போட்டார் கண்டியளோ. அதே நேரம்




இந்தப்பிள்ளை மாதிரி வேற பிள்ளையளுக்கும் பாடுறதுக்கு வாய்ப்புத் தாறதாகச் சொன்னது மட்டுமில்லாமல், உதவிக்காசும் வாங்கியிருக்கிறார். ஆனால் இது சம்பந்தமாக மற்ற ஆக்களுக்குச் சொல்லவேண்டாம் எண்டு எல்லாரட்டையும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார் கோயிலுக்காக இறுவட்டு தயாரிச்ச சிங்கம்.

ஒழுங்குசெய்த மாதிரி, வேற ஒரு நாட்டில இருந்து இசையமைப்பாளரை வரப்பண்ணி, அவருக்கு தங்குமிடம் ஒலிப்பதிவுக் கூடம் எல்லாம் ஒழுங்குசெய்து குடுத்து பிள்ளையளைக் கூப்பிட்டு ஒவ்வொரு ஆளாகப் பாடவைச்சிருக்கினம். இதில சிலருக்கு அரைப்பாட்டு, காவாசிப் பாட்டு எண்டெல்லாம் சொல்லிப் பாடப்ப பண்ணியிருக்கினம்.

ஏனெண்டால் அந்தப் பிள்ளையளின்ர பெற்றோரட்டையும் கோயிலுக்கு உதவி எண்டு சொல்லி பணம் வாங்கப்பட்டிருக்குக் கண்டியளோ. பாடல் ஒலிப்பதிவு எல்லாம் முடிஞ்சு, இறுவட்டு வெளியிடுறம் எண்டு சொல்லி ஒருநாளை ஒழுங்கு செய்துபோட்டு எல்லாருக்கும் அறிவிச்சிருக்கிறார் இறுவட்டுத் தயாரிச்ச சிங்கம். அவர் நாளை மட்டும் அறிவிச்சிருந்தால் பரவாயில்லை, அதோட சேர்த்து எல்லாருக்கும் ஒரு பற்றுச்சீட்டும் அனுப்பிவைச்சிருக்கிறார் பாருங்கோ.

என்ன பற்றுசீட்டுத் தெரியுமே? இசையமைப்பாளர் வந்தசெலவு முதல் அவர் தங்கியிருந்த விடுதி மற்றும் அவரின்ர சாப்பாட்டுச் செலவு, ஒளிப்பதிவுக்கூடச் செலவு, இறுவட்டு அச்சுச் செலவு எல்லாத்தையும் மொத்தமாய்ப் போட்டு ஒரு சாம்பார் காய்ச்சி, அந்தச் சாம்பாரை தனித்தனியாய்ப் பிரிச்சு, பாடின ஒவ்வொரு பிள்ளையும் இவ்வளவு காசு தரவேணும் எண்டு கணக்கு அனுப்பியிருக்கிறார். கிட்டத்தட்ட ஒவ்வொரு பிள்ளையும் 150 யூரோ தரவேணும் வேண்டும், காவாசி, அரைவாசி பாடின ஆக்கள் 75 - 100 யூரோ வரை தரவேணும் வேண்டும் பற்றுசீட்டு அனுப்பப்பட்டிருக்கு.

பாடின பிள்ளையளுக்கும் பெற்றோருக்கும் இதைக்கண்ட உடன கிறுதி வந்திட்டுதாம் கண்டியளோ. ஆனால் வாயைத் திறந்து கதைக்க முடியேல்லையாம்.




ஏனெண்டால், வாயைத் திறந்து கதைச்சால் பாடின பிள்ளையின்ர பாட்டு வெளிவராது. அல்லது மொத்தமாக இறுவட்டு வெளியில வராது. உவையாலதான் இறுவட்டு வெளிவரேல்லை எண்டு ஒரு குடும்பத்தின்ர தலையில பழியைப்போட்டு தப்பிச்சுக் கொள்ளுவார் இறுவட்டுத் தயாரிச்ச சிங்கம்.

எல்லாப்பெற்றோருக்கும் விசயம் இப்ப தெரியவந்த பிறகுதான், நான் இவ்வளவு குடுத்தனான், நீ எவ்வளவு குடுத்தநீ எண்டு ஆளாளுக்கு விசாரிக்கினமாம். ஆனால் இவையால இனி ஒண்டும் செய்யமுடியாது கண்டியளோ. திருப்பிக் கேட்டால் இறுவட்டு வெளியில வராது. அது வெளியில வராட்டில் பிள்ளையள் கவலைப்படுங்கள் எண்டு பெற்றோருக்கு கவலை பாருங்கோ. என்ன செய்யுறது எண்டு தெரியாமல் நிக்கினம் கண்டியளோ.

பிள்ளையள் பாடவேணும், நடனமாட வேணும் எண்டுறதெல்லாம் உண்மைதான் பாருங்கோ. ஆனால் அதை வைச்சு ஆரும் உழைப்புதேடுற மாதிரி நீங்களே வாய்ப்புக் கொடுத்திடாதேங்கோ. ஏனெண்டால் உப்பிடி உழைக்கிறதுக் கெண்டே ஒரு கூட்டம் தெரியுது பாருங்கோ. இந்தியாவில இருந்து யாராவது ஒரு பாடகரையோ நடிகரையோ இஞ்ச கொண்டு வந்து நல்ல தொகைக்கு நுழைவுசீட்டு விற்று மேடையேற்றுவினம்.

ஆனால் அதே மேடையில எங்கட பிள்ளை ஏறிப் பாட நாங்கள் நுழைவுச் சீட்டும் எடுக்கிறது மட்டுமில்லாமல், மேலதிகமாகக் காசு குடுத்து ஏறவேணும் எண்டுற தேவை இல்லை பாருங்கோ. எங்கட பிள்ளையளுக்கும் தகுதி இருக்குது. எங்கட பிள்ளையளிலையும் திறமையான குரல்வளம் கொண்ட, ஆடற் திறமை கொண்ட பிள்ளையள் இருக்கினம். என்ன ஒரு சிக்கல் எண்டால், எங்கட பிள்ளைகளுக்கு ஒரே நேரத்தில ஆயிரம் வேலைகள் எண்டுறதால ஒருவிசயத்தில தொடர்ச்சியா கவனம் செலுத்த முடியுறேல்லை பாருங்கோ. படிப்பு, பகுதி நேரவேலை, தமிழ்ப்பள்ளிக்கூடம், இசை வகுப்பு, நடன வகுப்பு, எண்டு எல்லா வகுப்புக்கும் போறதால வாற சிக்கல் தான் இது. அதுக்காக எங்கட பிள்ளையள் தென்னிந்தியக் கலைஞரோட பாட காசு குடுத்துப் பாடவேணும் எண்டது தவறு கண்டியளோ.

உதேமாதிரித்தான் உந்த இறுவட்டு தயாரிச்ச சிங்கமும் இருக்கு பாருங்கோ. உப்பிடியான ஆட்களுக்கு இடம் கொடுக்காமல் எங்கட பிள்ளையளின்ர திறமைக்கு ஏற்ற வகையில களம் அமைச்சுக் குடுக்கிறதை பெற்றோர் கவனத்தில கொள்ள வேணும் பாருங்கோ.

**கொள்ளையடிப்போன் வள்ளலைப் போலே**
**கோவிலை இடிப்போன்**
**சாமியைப் போலே வாழ்கின்றான்,**
**ஊழல் செய்பவன் யோக்கியன் போலே,**
**ஊரை ஏய்ப்பவன் உத்தமன் போலே,**
**காண்கின்றான்,**
**நீங்கள் அத்தனை பேரும்,**
**உத்தமர் தானா சொல்லுங்கள்....**


**- அப்ப வரட்டே**



வன்னித் தம்பி

# சீனர்கள் தமிழர்களின்

# வரமா சாபமா?





சீனர்கள் தமிழருக்கு ஒன்றும் புதியவர்களும் அல்ல, விரோதிகளும் அல்லர் என்பதற்கு வரலாற்று ஆதாரங்களும், கல் வெட்டுச் சான்றும் உள்ளது. அப்படியான கல்வெட்டு, இலங்கையின் கொழும்பு அரும் பொருள் காட்சியகத்தில் இன்றும் உள்ளதாக விக்கிப் பீடியா பதிவு செய்துள்ளது.

அக் கல்வெட்டின் சிறப்பு என்ன வென்றால், அந்தக் கல்வெட்டில் சிங்கள மொழி இல்லை. தமிழ் மொழி, பாரசீக மொழி, சீன மொழி என்கிற 3 மொழிகள் மட்டுமே உள்ளன. அதைத் தமிழ் இன அழிப்பைச் செய்த, இன்னமும் செய்து வரும் வெட்கங் கெட்ட சிங்களம் தனது தலை நகரில் காட்சி படுத்துகிறது.

### அக்கல்வெட்டு கூறுவது என்ன?

செங் கே *(Zheng He)* என்ற பெயர் கொண்ட சீனக் கடற்படைத் தளபதி, இலங்கை வந்த நிகழ்வைத் தெரிவிக்கும் சீன அரசு நிறுவிய நினைவுச் சின்னம். அதனை இரு கூறுகளாக படப்பதிவாக்கி உள்ள விக்கிப் பீடியாவை நன்றி பாராட்டி அகரம் மறு பிரசுரமாக இங்கே தருகிறது.

இவை என்ன மளிகைச் சாமான் பட்டியலா? என நீங்கள் நினைப்பது புரிகிறது. உண்மைதான் 1911ல் காலி நகரில் எஸ்.எச்.தொம்லின் என்பவரால் கண்டெடுத்து, கொழும்பு அரச அருங்காட்சியகத்தில் காட்சிப் படுத்தப்பட்டு வரும் சிங்கள மொழிக்கு இடமளிக்காத இப் பட்டயம், "புத்தரின் பெருமைகளைப் புகழ்ந்தும், சீனக்


செங்கே மெழுகுச் சிலை

கடற்படை அணி தொண்டீசுவரத்தில் உள்ள இந்துக்களாலும், பெளத்தர்களாலும் அதிகம் தரிசிக்கப்படும் தேனாவரை நாயனார் கோயிலுக்கு வழங்கிய காணிக்கைகளின் பட்டியல். இதனை விக்கிப் பீடியா ஜனவரி 5, 2012ல் பதிவேற்றம் செய்ததாக அறிவித்தும் வருகிறது.

இது நிகழக் காரணமான சம்பவம்தான் சீன மக்களும், அரசனும் இலங்கை மக்கள் மீது காட்டும் உண்மையான பாசம், பரிவினைப் பிரதிபலிக்கும் அன்பளிப்பாக இப் பட்டயம் வரலாற்றில் நிமிர்ந்து நிற்கிறது.

சீன அரசின் பொக்கிஷ கடற்படையணி, தனது நாட்டின் வணிக கப்பல்களுக்கு அரேபியா, கிழக்கு ஆபிரிக்கா, பாரசீக நாடுகளுக்கான கடல் வழித் தடத்தில் விடுக்கப்படும் எதிர்ப்புகள், அச்சுறுத்தலகளை இராணுவ ரீதியாகக் கையாளும் கடற்படை அணியின் கட்டளைத் தளபதிதான் செங் கே.

கடற்கொள்ளையர்களைக் கட்டுப்படுத்தி, சீனாவின் வணிகத்தைப் பாதுகாக்க சிறுபடை அணியுடன் எதிர்ப்படும் மிரட்டல்களை இராணுவ ரீதியில் வெற்றி கண்டார். அப்படியான ஒரு இராணுவ நடவடிக்கையை இலங்கையின் கோட்டை அரசன் வீர அழகேஸ்வரனின் அதிகாரிகளின் மிரட்டலை அரேபியா கிழக்கு, ஆபிரிக்க, பாரசீக கடல் வழித் தடத்தில் சீன கடல் வணிக படை அணிக்கு, இலங்கையின் கோட்டை அரசன் வீர அழகேஸ்வரனின் அதிகாரிகள் விடுத்த அச்சுறுத்தலை எதிர்த்து, அரசனைக் கைது செய்து, தனது நாலாவது பயணத்தில் மேலும் 30 நாடுகளின் அரச அதிகாரிகளுடன் சீன அரசன் மிங் மன்னிப்பைப் பெற்ற பின்னர், விடுதலை செய்யப்பட்டான் என்கிறது விக்கிப் பீடியா பதிவு.

வீர அழகேசுவரனின் அதிகாரிகள், தமது கடல் எல்லைக்குள் விடுத்த அச்சுறுத்தல் நியாயமானது எனச் சீன அரசர் கருதியதால், அவனை மீள அரசனாக்கியது சீனா. அத்துடன் நின்று விடாமல், புத்தரைப் போற்றியும், இந்து புத்த மதப் பக்தர்களின் மனம் கோணாமல் இருக்க, திருத் தொண்டீசுவரம் என இந்நாளில் அறியப்படும் டொன்ற முனை என்கிற இலங்கையின் தென் கடலில் உள்ள தேவேந்திர முனை சிவாலயம் அன்று தேனாவரை நாயனார் எனப் புத்த மதத்தவரும் பிரியமுடன் தரிசிக்கும் ஆலயமாக மாறிய வரலாற்றையும் சீனா எமக்கு இக்கல்வெட்டுப் பதிவின் மூலம்.



இது மட்டும் அல்ல 1950களில் மிகப் பெரும் பொருளாதார நெருக்கடியால் இலங்கை அரசும், மக்களும் உணவுப் பஞ்சத்தில் வாடிய பொழுது, அமெரிக்காவோ அல்லது இந்தியாவோ இரக்கம் எதுவும் காட்டாத நிலையில், சீனக் குடியரசும் மக்களும், ரப்பர், அரிசி ஒப்பந்தம் செய்து பண்டமாற்று முறையில் இலங்கையின் அந்நியச் செலவாணித் தட்டுப்பாட்டைத் தவிர்க்க உதவியது. அதனால் பட்டினிச் சாவிலிருந்து சீனா எமக்கு உயிர்ப் பிச்சை போட்டது.

இன்றும் சீனா நடந்து முடிந்த தமிழ் இன அழிப்புப் போரில் சிங்களவரின் அரசுகளுக்கு உதவியதே அல்லாமல், தமிழ்த் தலைவர்களைப் பகைக்க வில்லை என்பதே உண்மை என்பது வரலாறாகத் தெரிய வருகிறது. எமது போர் வெற்றியைப் பறிப்பதில் புலிகளின் 10க்கு மேற்பட்ட ஆயுதக் கப்பல்கள் மூழ்கடிக்கப் பட்டதால் என்பதை உலகமே சொல்கிறது.

அந்தக் கப்பல்களின் நடமாட்டங்களையும், இருப்பிடங்களையும் செய்மதித் தரவுகளை அமெரிக்கா கொடுக்க, இந்தியா கொடுத்த செயற்படுத்தல் உதவியுடன், இலங்கைக் கடற்படை சாதித்ததாக ஒரு தமிழரே பெருமைப்பட்ட செய்திகளை நாம் படித்தோம். இத்தனைக்கும் ஆயதங்களும், ஆயுதக் கப்பல்களும் சீனக் கடலில் நடந்துள்ள போதிலும், சீனா கண்டும் காணாமலும் விட்டதை யாரும் மறுக்க முடியுமா?

ஆனால் ஒய்வு பெற்ற இந்திய உளவுப் படை அதிகாரி மதன் குமார் சொல்கிறார், "தொடக்கத்தில் கை எறி குண்டுகளை இலங்கைக்கு சீனாதான் கொடுத்து, புலிகளை அழிக்க உதவியது" என்கிற பொய்யைச் சொல்லி வருகிறார்.

அமெரிக்கா புலிகள் இயக்கத்தைத் தடை செய்தது, இலங்கை தடை செய்யாத பொழுதே, இந்தியா தடை செய்தது. இப்பொழுதும் புலிகளின் அரசியல் நடவடிக்கைகளைத் தொடர முடியாத படிக்குத் தடை செய்து வருகிறது. 1983 கலவரத்தில் அகதிகளாக இந்தியா கொண்டு சென்ற தமிழ் ஏதிலிகளை, 50




வருடங்களாகியும் நாடற்ற சிறைக் கைதிகளாக இந்தியா சாகடித்து வருகிறது.

இன்னமும் இவை எதனையும் தெரியாத பூனைகளைப் போல எமது தலைவர்கள், 13 ஆவது திருத்தச் சட்டம் மாகாண சபை ஆட்சி என்கிற குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டிக் காட்டுகிறார்கள். அமெரிக்கா புலிகளைப் பயங்கரவாதிகள் எனப் பட்டியலிட்டு, ஏனைய ஐரோப்பிய நாடுகளையும் கட்டாயப்படுத்தி புலிகளையும், தமிழர்களையும் உலகப் பயங்கரவாதிகளாக்கி, திரிகோண மலைத் துறைமுகத்தைக் கடன் கொடுத்துப் பறிக்கிறது.

இந்தியா பல வியாபார ஒப்பந்தங்களையும், பொருளாதார, இராணுவ ஒப்பந்தங்கள் செய்தும், கொரோனா ஊசி மருந்துகளையும் இலங்கைமீது திணித்து, இலங்கை அரசையும், மக்களையும் சுரண்டிக் கொழுக்கிறது. இத்தனையும் போதாது என்பது போல, தனது அரசியல் தீர்வை எங்கள் மீது திணித்து, தமிழர்களை இரண்டு நாடுகளின் கொத்தடிமைகளாக்க, எங்கள் அரசியல் கூலித் தலைமைகளைப் பயன்படுத்தி வருகிறது.

எங்களுக்குரிய நியாயமான, நிரந்தர அரசியல் தீர்வு திரு.விக்கினேஸ்வரன் ஐயா சொல்வது போல, சர் இருக்க சர்வதேச மற்றும் ஐ.நா.சட்ட விதிகளின் மூலம் பெறுவதே நேர்மையான இறுதியானத் தீர்வாக இருக்க முடியும். அப்படியான தீர்வை சீனா தடுத்து விடும் எனப் பயமுறுத்தி, எம்மைச் சீனாவிடம் அண்டவிடாமல் தடுப்பதில் இந்தியாவும், மேற்குலக நாடுகளும் சதி செய்வது அப்பட்டமாகத் தெரிகிறது. சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் சினாவில் கஞ்சாப் போர் நடத்திச் சீரழித்த நாடுதான் அமெரிக்கா. இப்பொழுது இலங்கைத் தமிழர் பகுதியில் இந்தியா நடத்துவதும் அத்தகைய போர்தான்.

‘எதிரிக்கு எதிரி எமக்கு நண்பன்’ என்பதுபோல, தமிழர் நாமும் சீனாவுடன் இணைந்து எமக்கான அரசியலை தீர்மானிப்பதே சிறந்த வழி. வயித்துக் குத்தோடு நாம் இன்னமும் உறவு வைக்க முடியாது. கேணல் அரிகரன் சொல்வது போல, இந்தியாவிடம் நாம் கேட்டுப் பெற எதுவும் இல்லை என்பதை அவர்களின் முகத்தின் எதிரே சொல்ல வேண்டிய காலம் வந்து விட்டது. சீனாவை அணுகுவோம், நிலையானத் தீர்வைத் தேடுவோம்.



ஊடகவியலாளர் வளர் மெய்யறிவான்

# ஈழத்துச் சிவானந்த அடிகள்



ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டுக்கு என்ன செய்தார்கள்? எனக் கேட்பவர்கள் பலருக்கு, இந்திமொழி எதிர்ப்பும், திராவிடர் கழக மற்றும் திமுகவின் உண்மையான வரலாறும் முழுமையாகத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

***"(இராஜகோபால) ஆச்சாரியார் அவர்கள் 1938 இல் இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவேன் என்று அறிவித்தபோது, முதல் தந்தி அடித்தவர் ஈழத்து சிவானந்த அடிகளே ஆவார். இந்தி எதிர்ப்பு இயக்கத்தை அவர்தான் துவக்கினார். பிறகுதான் நாவலர் பாரதியார், பெரியார் இராமசாமி, அண்ணாத்துரை போன்றவர்கள் கலந்து கொண்டார்கள். ஈழத்து சிவானந்த அடிகள் இந்தி எதிர்ப்பின் தனிப் போராளியாகப் பணியாற்றிச் சிறை புகுந்தார்."***

*- இரா. நெடுஞ்செழியன், (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்)*

*திக 1944 ல் தொடங்கப்படுகிறது. திமுக 1949 ல் தொடங்கப்படுகிறது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் 1938 ல் ஈழத்து சிவானந்த அடிகளால் தொடங்கப் படுகிறது. இதில் வியப்பு என்னவெனில், இந்த வரலாறு குறித்துக் கூறும்போது வே. ஆனைமுத்து ஐயாகூட உண்மைத் தகவலை மறைத்தது.*

*அவரிடம் இதுகுறித்து கேட்ட போது, "ஈழத்து அடிகள் களப் போராட்டத்தில் ஈடுபடவில்லை. பெரியார்தான் களப் போராட்டத்தில் ஈடுபட்டார்" என்று விகடனுக்கு அளித்தப் பேட்டியில் தெரிவித்தார். இரா. நெடுஞ்செழியன், தனி மனிதாகப் போராடி, சிறை சென்றார் ஈழத்து அடிகள் என்கிறார். சிறை செல்வது, ஆனைமுத்து ஐயாவுக்குக் களப்பணியாகத் தெரியவில்லையா என்ன?*

*அதுமட்டுமல்ல, "1937 இலும் அதற்கு முன்னரும் தமிழ்நாட்டில் விடுதலை இயக்கமான காங்கிரசுக் கட்சியைத் தவிர, வேறு எந்தவிதமான அரசியல் கட்சிகளும் இருந்ததில்லை. ஆனால், நீதிக்கட்சி **Justice Party** என்ற ஒரு அமைப்பு இயங்கி வந்தது என்ற போதிலும், அதற்கும் பொது மக்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் உண்டாகவில்லை. அனைவருமே பெரும் மிட்டா மிராசுகள் ஆகவும், பெரும் பணக்காரர்களாகவும் இருந்தனர். அதனால் அவர்கள் பட்டம் பதவிகளைப் பெறுவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து, அதிலேயே அமைதி பெற்றனர்.*

*இது தவிர அரசியல் கலப்பு சிறிதுமற்ற தன்மான இயக்கம் **self-respect movement,** அதாவது சுயமரியாதை இயக்கம் என்ற அமைப்பும் அப்போது தமிழ்நாட்டில்*



இருந்தது. இதன் நோக்கம் புரோகித மறுப்பு, கோவில் வழிபாட்டால் ஏற்படும் காலக்கேடு, பொருளழிவு, மனிதன் உள்ளம், ஒருவன் உயர்ந்தவன், இன்னொருவன் தாழ்ந்தவன் என்று கூறிக் கொள்வதால் உண்டாகும் கொடுமைகளும், கெடுதல்களும் என்ற இவைகளை விளக்கி, தமிழ்நாட்டில் பேச்சாலும், எழுத்தாலும் பணியாற்றி வந்தது. இந்த அமைப்புக்கு ஊருக்கு நான்கைந்து பேர் என்ற அளவில்தான் ஆதரவு இருந்தது" என்று அன்றைய உண்மையான வரலாற்றைப் பதிவு செய்கிறார் ஈழத்து அடிகள்.

"1937 - வரை விடுதலை இயக்கமாக விளங்கி வந்த காங்கிரசுக் கட்சி, ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கத்துடன் தேர்தலில் நிற்பதென்று முடிவு செய்தது. அதன்படி தேர்தலுக்கான ஏற்பாடுகள் தொடங்கப் பெற்றன. தமிழ்நாட்டில் திரு.இராசகோபாலாச்சாரியார் அவர்களும், ஏனைய காங்கிரசுக்காரர்களும் தேர்தல் வேலைகளில் ஈடுபட்டனர். தமிழ்நாட்டில் காங்கிரசுக்குப் பெரும்பான்மையான இடங்கள் கிடைத்தன.

முதலமைச்சரா இராசி ஆச்சாரியார் அவர்கள் ஆக்கப்பட்டால், அவர் தமது முதல் வேலையாகத் தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிக் கூடங்களில் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாக்குவதாகக் கூறி வந்தார்கள். அப்போது, நான் கருவூரில் (கரூர்) இருந்த ஒரு அன்னக் காவடி மடத்தில் இருந்து வந்தேன். தமிழ் மொழிக்கு என்னாலான தொண்டினைச் செய்வதுதான் எனது குறிக்கோளாக இருந்தது.

தமிழ்நாட்டில் இந்தி மொழி கட்டாயப் பாடமாக்கப்படும்; அதுவே ஆச்சாரியார் (இராஜாஜி) அவர்களின் முதற்ப் பணியாக இருக்கிறது என்ற செய்தியை, செய்தித் தாள்களின் வாயிலாக அறிந்த நான், 12.02.1937 இல் "தமிழ் நாட்டில் இப்போது சட்டமன்றத் தேர்தல் நடக்க இருக்கிறது. அதற்கு நண்பர்கள் பலர் உங்களை நாடி வாக்குரிமை கேட்க வருவார்கள். அப்போது நீங்கள் அவர்களிடம் ஐயா, நீங்கள் உங்கள் மொழியாகியத் தமிழை ஆதரிக்க வேண்டும். சட்டமன்றங்களிலும், பிற இடங்களிலும் தமிழ் மொழியிலேயே அலுவல்கள் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தமிழ் நாட்டில் இந்தி போன்ற வேற்று மொழிகளைக் கட்டாயப் பாடமாக்குதல் கூடாது என்பதை ஒப்புக் கொள்ளுங்கள். இங்கனம் உறுதி கூறுவீர்களானால் எங்களுடைய வாக்குரிமையைப் பெறலாம் என்று கூறித் தமிழ் மொழியும், தமிழ் மக்களும் முன்னேற்றம் அடையும் வழியைத் தேடுங்கள். இதுவே தமிழ் மக்களாகிய உங்கள் கடமை" என்ற ஓர் அறிக்கையை 'உங்கள் கடமை' என்ற தலைப்பில் வெளியிட்டு, அதனைத் தமிழ் நாடெங்கும் அனுப்பி வைத்தேன்.

அன்று முதல் இந்தி எதிர்ப்புப் பணியிலேயே எனது முழு நேரத்தையும் செலவிட்டு வந்தேன். தனி ஒருவனாக, அன்னக்காவடி மடத்தார் அளிக்கும் பிச்சை உணவை உண்டு கொண்டு, தமிழுக்காக அயராது பணியாற்றி வந்தேன். தமிழ்நாட்டில் யாருக்கும் அறிமுகமில்லாத என்னால் தொடங்கப் பெற்ற இந்தப் பணிக்கு, நாளாவட்டத்தில் நல்ல ஆதரவு கிடைத்து வந்தது. இந்த நேரத்தில்தான்

பல்லாவரம் பொது நிலைக் கழக ஆசிரியர் உயர்திரு மறைமலை அடிகளார், 'இந்தி பொது மொழியா?' என்ற நூலை வெளியிட்டிருந்தார்கள்.

அந்த நூலைப் பார்த்ததும் அதனை அச்சிட்டுத் தமிழ்நாடெங்கும் அனுப்ப வேண்டுமென்ற விருப்பம் உண்டாகவே. திரு.கோ.து.நாயுடு **(G.D.Naidu),** பாகநேரிக் காசி விசுவநாதன் செட்டியார் ஆகிய இருவரின் பண உதவியினால், 15,000 படிகள் அச்சிட்டுத் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்பி வைத்தேன். பிறகு, நாவலர் சோமசுந்தர பாரதியார் எம்.ஏ.பி.எல் அவர்கள் இந்தி கட்டாயப் பாடமா? என்ற ஒரு நூலை ஆங்கிலத்தில் வெளியிட்டிருந்தார்கள். அதனையும் தமிழில் மொழி பெயர்த்து, 15,000 படிகள் தமிழ்நாடு முழுவதும் இலவசமாக அனுப்பி வைத்தேன்.

இவையன்றி, இந்தி எதிர்ப்புப் பற்றிய பல அறிக்கைகள் அச்சிடப் பெற்றுத் தமிழ்நாட்டின் மூலை முடுக்குகள் எங்கும் அனுப்பப் பட்டன. கருவூரிலும், அதனை அடுத்துள்ள சிற்றூர்களிலும் உள்ள தமிழ்ப் பெருமக்கள் என்னுடைய பணியை வரவேற்று, ஊக்கமளித்துப் பொருளுதவியும் புரிந்து வந்தனர். இந்த நிலையில் சென்னையில் இருந்த துறவிகளான அருணகிரி அடிகளும், சண்முகானந்த அடிகளும் எனக்குப் பெருந்துணையாக நின்று, இந்தி எதிர்ப்பில் முழுப் பங்கெடுத்துப் பெரும்பணி புரியலாயினர். இந்த நேரத்தில்தான் காங்கிரசுக் கட்சி தேர்தலில் வெற்றி பெற்று, ஆளும் பொறுப்பை ஏற்றுப் பணி புரியத் தொடங்கிற்று.

இராசாசி ஆச்சாரியார் முதலமைச்சர் ஆனார். முன்பு தெரிவித்த படியே முதல் வேலையாகத் தமிழ்நாட்டில் உள்ள 60 உயர் நிலைப் பள்ளிக் கூடங்களில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்கும் திட்டத்தை வெளியிட்டார். இதனை அறிந்த நான், உடனே இந்தி எதிர்ப்பு மறியல் நடத்த வேண்டுமென்ற முடிவுக்கு வந்து, ஓர் அறிக்கையை எழுதி, அதனை எடுத்துக் கொண்டு ஈரோட்டிலுள்ள (பெரியாரின்) விடுதலை அலுவலகம் சென்றேன். (அறிக்கையின் தேதி 25/4/1938)

பெரியார் இராமசாமி அவர்களிடம் இந்த அறிக்கையைக் காட்டி, இதனை விடுதலை மற்றும் குடிஅரசு இதழ்களில் வெளியிட்டு உதவுமாறு கேட்டுக் கொண்டேன். அறிக்கையைப் பார்த்து விட்டு, "இது காங்கிரசார் கையாளும் சண்டித்தனம். சத்தியாகிரகம், மறியல் என்பதெல்லாம் வெறுங் கேலிக் கூத்து" என்று கூறி அறிக்கையை வெளியிட மறுத்துவிட்டார். பிறகு ஈரோட்டிலுள்ள எனது நண்பர் சண்முக வேலாயுதம் அவர்களிடம் சென்று, நிலைமையை விளக்கிக் கூறினேன். அவர் அந்த அறிக்கையைத் தம்முடைய சொந்த செலவில் அச்சிட்டுத் தருவதாகக் கூறி, அந்த ஊரில் இருந்த இரத்தினா அச்சகத்தில் அச்சிட்டுத் தந்ததுடன், அதனைத் தமிழ்நாடெங்கும் அனுப்பும் அஞ்சல் செலவையும் திரு.சண்முக வேலாயுதம் அவர்களே ஏற்றுக் கொண்டு பேருதவி புரிந்து, நான் ஏற்கொண்ட பணிக்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்தார்கள்.

சென்னையிலுள்ள முதலமைச்சர் இல்லத்தின் முன்பு 01.06.1938 இல் இருந்து மறியல் தொடங்கப்படும் என்ற எனது அறிக்கை வெளியிட்ட பின்பு சி.டி.நாயகம் அவர்களைக் கண்டு விளக்கினேன். அவருடைய உதவியால், அவருக்குச் சொந்தமான ஓர் இடத்தில் முதலமைச்சர் இல்லத்துக்கு அருகில் இந்தி எதிர்ப்பு நிலையத்தை நிறுவி, இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடங்கியது. ஈழத்து சிவானந்த அடிகள், களப்பணியைத் தொடங்கியதும், ஈழத்து அடிகள் என்பதை அப்படியே மறைத்து, இந்தித் திணிப்பு எதிர்ப்பை பெரியார் இராமசாமியும், அண்ணாவும், கருணாநிதியும்தான் தொடங்கினார்கள் என்பது வடிகட்டிய பொய், ஏமாற்று வேலை.


V BOX இப்போழுது
அனைத்து நாடுகளிலும்
300 க்கும் மேற்பட்ட
CHANNELS மற்றும்
5000 க்கும் மேற்பட்ட
திரைப்படங்கள்
BIGG BOSS
ULTIMATE இனையும்
கண்டுகளியுங்கள்...
வாராந்தம் புத்தம்புது திரைப்படங்கள்,
உங்கள் அபிமான தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்
ஆகிய அனைத்தையும் கண்டுகளிக்கலாம்
24 மணிநேர தகவல் உதவிச்சேவையுடன் V BOX
OFFICE: 0044 2037 690498 | UK: 0044 7882274040 | UK: 0044 7723229209
SWISS: 0041 4455 14321, 0041 7792 47857 | FRANCE: 0033 782775490, 0033 977195911
NETHERLANDS, BELGIUM, LUXEMBOURG: 0031 621604168 | ITALY: 0039 3510257812 , 00393208704293
GERMANY: 0049 17670334213, 0049 1514 6978484 ,0049 152 17743709
DENMARK: 0045 20829548, 0045 20718780



சண் தவராஜா

# பயங்கரவாதத் தடைச் சட்டத் திருத்தம்

# புதிய மொந்தையில் பழைய கள்ளு

ஐ.நா. மனித உரிமைச் சபைக் கூட்டத் தொடர் பெப்ரவரி 28ஆம் திகதி ஆரம்பமாக உள்ள நிலையில், சிறி லங்கா அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றியமைக்கும் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது. 1979ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்துவரும் பயங்கரவாதத் தடைச் சட்டம், அன்றைய நிறவெறித் தென்னாபிரிக்காவின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் தழுவியதாக வடிவமைக்கப்பட்டு இருந்தது.

அப்பட்டமான மனித உரிமை மீறல் அம்சங்களைக் கொண்டிருந்த அந்தச் சட்டத்தின் சாராம்சம், அப்படியே அடங்கியதாக சிறி லங்காவில் அறிமுகம் செய்யப்பட்ட சட்டம் 'தற்காலிக ஏற்பாடுகள்' என்ற மகுடத்தின் கீழ் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டது. ஜே.ஆர்.ஜெயவர்தன தலைமையிலான அரசாங்கத்தில் நீதி அமைச்சராகப் பணியாற்றிய கே.டபிள்யூ.தேவநாயகம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சட்டத்திற்கு, அன்றைய எதிர்கட்சியாக விளங்கிய அ.அமர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஆதரவு தெரிவித்து இருந்தது.

தமிழ்த் தீவிரவாதம் வடக்கு, கிழக்கில் முளைவிட்ட காலப் பகுதியில் அறிமுகமான இந்தச் சட்டம், நாடு முழுமைக்குமான ஒன்றாக இருந்த போதிலும், சிறிலங்கா வரலாற்றில் அது தமிழ் மக்களுக்கு எதிரான ஒன்றாகவே நடைமுறைப்படுத்தப்பட்டது. 1987 முதல் 1989 வரையான இரண்டாவது ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது மாத்திரமே அது சிங்கள இளைஞர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு இருந்தது. அத்தோடு, தமது அரசியல் எதிரிகளை ஒடுக்குவதற்கான ஒரு மார்க்கமாகவும் இன்றுவரை ஆட்சியாளர்களால் பாவிக்கப்பட்டும் வருகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடுமையில் இருந்து முஸ்லிம் சமூகம் மாத்திரமே பெரிதும் தப்பித்து இருந்தது. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்ட காலகட்டத்தின் ஆரம்பத்தில் முஸ்லிம்களும் இணைந்திருந்த வேளை, சிறிது காலம் முஸ்லிம் சமூகமும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடுமைகளை அனுபவிக்க நேர்ந்தது. காலமாற்றத்தில் அந்த நிலை மாறியது.

ஆனால், 2019, ஏப்ரல் 22இல் சிறி லங்காவில் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதல்களை அடுத்து, இன்றுவரை முஸ்லிம் சமூகமும் இந்தச் சட்டத்தின் கொடுமைகளுக்கு ஆளாகி நிற்பதைப் பார்க்க முடிந்தது.

ஆளுங் கட்சியாக இருக்கும் போது எதிர்க் கட்சியும், எதிர்க் கட்சி ஆளுங் கட்சியாக மாறிய பின்னர் முன்னர் ஆண்ட கட்சியும் இந்தக் கொடிய சட்டத்தின் பாதிப்புகளை அவ்வப்போது உணர நேரிட்டாலும், எந்தவொரு பிரதானக் கட்சியும் இந்தச் சட்டத்தை முழுவதுமாக விலக்கிக் கொள்ள முன்வரவில்லை. நாட்டில் நடைபெற்ற ஆயுதப் போராட்டங்களைக் காரணங் காட்டி, தொடர்ச்சியாக நடைமுறையில் இருந்த இந்தச் சட்டம், ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்து 13 ஆண்டுகள் கடந்த நிலையிலும் தொடர்வது விநோதமாக உள்ளது.

எந்தவித நியாயமும் இல்லாமல் இந்தச் சட்டத்தைப் பாவனையில் வைத்திருக்க சாக்குப் போக்குகளைக் கூறிவந்த அரசாங்கங்களுக்கு, 2019, ஏப்ரல் தாக்குதல்கள் ஓர் காரணத்தை வழங்கின. அதன்வழியே இன்னும் பல ஆண்டுகளுக்கு இந்தச் சட்டம் நடைமுறையில் இருக்கப் போகின்றது என்பதை ஊகித்துச் சொல்வதற்கு பாரிய அறிவாற்றல் எதுவும் தேவையில்லை.

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான ஐ.நா. மனித உரிமைச் சபையில் பல வருடங்களாக நடைபெற்று வரும் கருத்தாடல்கள் முறையான பரிகாரம் எதனையும் இதுவரை பெற்றுத் தரவில்லை என்பதே யதார்த்தம். அந்த மன்றத்தில் முன்மொழியப்பட்ட பல விடயங்களுள் ஒன்றாக இருப்பது பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை. அந்த நிபந்தனையைப் புறந்தள்ள பல வழிகளிலும் முயன்று, முடியாமற் போன தருணத்திலேயே, தற்போதைய முன்னெடுப்பை அரசாங்கம் மேற்கொண்டு உள்ளது.

புதிய சட்டம் பழைய சட்டத்தின் சாரத்தை உள்ளடக்கி, அதிலுள்ள சில விடயங்களைத் தளர்த்துவதாக உள்ளதைப் பார்க்க முடிகின்றது. இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர் 18 மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்படலாம் என்ற விதி, 12 மாதங்களாகத் தளர்த்தப்பட்டுள்ளது. இதனால் விளையப் போகும் நன்மை எதுவுமில்லை. ஏனெனில், குறித்த தடுப்புக் காவல் காலம் முடிவதற்கு முன்னதாக வழக்குத் தொடர்ப்பட்டு விட்டால், அது காலவரையறையின்றி இழுத்தடிக்கப்படக் கூடியதே என்பதை, அனுபவத்தில் பார்த்தவர்கள் தமிழ் மக்கள்.

அது தவிர, கைதிகளை நீதபதிகள் நேரடியாகச் சென்று பார்வையிடலாம், குறை கேட்கலாம் என்பது போன்ற புதிய விதி ஒன்று அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது. இது போன்ற விதிகள் ஏற்கனவே சட்டப் புத்தகங்களில் இடம்பிடித்துள்ள விதியே. ஆனாலும், நடைமுறையில் எந்தவொரு நீதிபதியும் அதனைப் பயன்படுத்துவதில்லை. சாதாரண கைதிகள் விடயத்திலேயே பாராமுகமாக இருக்கும் நீதிபதிகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கைதிகள் விடயத்தில் எவ்வாறு நடந்து கொள்வார்கள்? என்பது ஊகிக்கக் கூடியதே!.

மொத்தத்தில் புதிய சட்டம் ‘புதிய மொந்தையில் பழைய கள்ளு’ என்ற விதத்திலேயே உள்ளது. இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவர்களும் இதனையே தெரிவித்து உள்ளார். நடைபெறப்போகும் மனித உரிமைச்

சபைக் கூட்டத்தொடரில், சிறி லங்கா தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ள நிலையைக் கருத்தில் எடுத்து, அரசாங்கம் மேற்கொள்ளும் ஒரு நகர்வே புதிய சட்டம் எனத் தெரிவித்துள்ள அவர், இது தொடர்பாக சபையின் உறுப்பு நாடுகளுக்கும் தெரியப்படுத்தி உள்ளார். மறுபுறம், புதிய சட்டத்தை எதிர்த்துக் கையெழுத்து இயக்கம் ஒன்றை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியினர் ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை உள்ளிட்ட மனித உரிமை அமைப்புகள் தங்கள் கண்டனங்களைப் பதிவு செய்துள்ளன. நியூயோர்க்கைத் தலைமையகமாகக் கொண்டுள்ள சர்வதேச நீதிபதிகள் ஆணைக் குழு, 'சிறி லங்கா அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் மேற்கொண்ட திருத்தங்கள் போதுமானதாக இல்லை. கொடூரமான இந்தச் சட்டத்தை முழுவதுமாக ரத்துச் செய்ய வேண்டும்" எனத் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

சிறி லங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரை. உள் நாட்டிலோ அன்றி, வெளி நாடுகளிலோ எழும் கண்டனங்களைக் கவனத்தில் கொள்ளப் போவதில்லை என்பது ஊகிக்கக் கூடியதே!. ஜனநாயக விழுமியங்கள் தொடர்பில் எதுவித அக்கறையும் அற்ற ராஜபக்ச சகோதரர்களின் ஆட்சியில், மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்கள் ஏதாவது நடைபெறும் என எதிர்பார்ப்பது அறிவிழிவு. எப்போது எல்லாம் மக்களுக்கு நன்மை பயக்கும் விடயங்கள் ஓரளவேனும் நடைபெற்று உள்ளனவோ, அவை யாவும் ஆட்சியாளர்களின் விருப்பில் அன்றி, புற அழுத்தங்கள் ஊடாகவே நிறைவேறி உள்ளன என்பதே வரலாறு. எனவே, தொடர்ந்தும் பல்வேறு வழிகள் ஊடாக அழுத்தங்களைப் பிரயோகிப்பது ஒன்றே தமிழ் மக்கள் முன் உள்ள ஒரேயொரு தெரிவு.






BCN TRAVELS (REISEBÜRO)
Consulting Network.ug
(Travels-Business-Worldwide)
RYANAIR
easyJet
KLM
Emirates
AIR CANADA
SINGAPORE AIRLINES
QANTAS
International Monye Transfers
Ria
Worldwide Money Transfer
small world
Last Minute Tickets avaliable on Sunday and Holidays
Tel : 01638714369
Flugtickete und hotel kann man auch hier buchen
Rheinische str-72
44137 Dortmund
023110876360
023110876361
Fax : 023110876362
bcntravels@hotmail.de
People's Insurance
Covid19 Insurance
Health Declaration Form
Ministry of Health - Sri Lanka
SRILANKA, INDIA CANADA, AUSTRALIEN,
SINGAPUR, ERUOPEA, UK, USA
AIR FRANCE
Lufthansa
الطيران العماني
OMAN AIR
QATAR
AIRWAYS القطرية
एअर इंडिया
AIR INDIA
BRITISH AIRWAYS
www.bcn-travels-dortmund.com



Smt. லிதியா மயூரன், சுவிஸ்

# பரதநாட்டிய உலகியல் வரலாறு

பாகம்.2

வடக்கில் இருந்த முஸ்லிம், முகலாய மற்றும் பாரசீக படையால் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று கூறும் ஆஷீஷ் மோகன், பிரிட்டிஷ் விதித்த தடையே 18,19ஆம் நூற்றாண்டுகளில் தேவதாசிகள் சிதறிப் போக காரணமாக அமைந்ததாக கூறுகிறார்.

“18ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் ஆட்சியின்போது, வளங்கள் மற்றும் பொருளாதாரம் சிதைந்து போக, மன்னர்களின் ஆதரவும் இல்லை. அதனால் சிறு கோயில்களால் தேவதாசிகளுக்கு ஆதரவளிக்க முடியாமல் போனது. இதனால் அவர்களின் கலையும் பாதிப்புக்குள்ளானது. இந்த காரணத்தால் வேறு தொழில் தேடி அவர்கள் பயணிக்க ஆரம்பித்தனர்.”

ஏழ்மை நிலைக்குத் தள்ளப்பட்ட தேவதாசிகள் பலர், பிழைப்பு தேடி மெட்ராஸ், மைசூர் போன்ற பெரும் மாகாணங்களுக்குச் செல்லத் தொடங்கினர். நெருக்கடி காரணத்தினால் தேவதாசிகள் அப்போதைய மெட்ராசில் விலைமாதர்களாக ஆனார்கள், இல்லை அந்த நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்று வரலாற்றாய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில், தேவதாசிகள் முறை என்பது பெண்களை முன்னிலைப் படுத்துவது என்பதால், இந்த ஆணாதிக்க சமூகத்தில் அவர்களின் நடத்தை கேள்விக்குறியாகவே இருந்தது என்று கூறுகிறார் ஸ்வர்ணமால்யா.

இப்படி இருக்கும்போது 1882ல் கோயில்களில் நடனம் ஆடுவதற்குத் தடை செய்ய வேண்டும் என்ற இயக்கம் தொடங்கப்பட்டது. இந்துக் கோயில்களில், பெண்கள் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் முறைக்கு தடை விதிக்க அறிவுறுத்தப்பட்டது. கல்வி மற்றும் கலாசாரத்தை நிர்வாகத்தில் இருந்து தனியே பிரிக்க வேண்டும் என்பது பிரிட்டிஷாரின் நோக்கமாக இருந்தது என்கிறார் ஆஷிஷ் கோக்கர்.

பின்னர் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல சமூக சீர்த்திருத்தவாதிகள், தேவதாசி முறைக்கு எதிராகக் குரல் கொடுத்தனர். பெண்கள் கோயில்களுக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவும், கோயில்களில் நடனம் போன்ற கலைகளை வெளிப்படுத்தவும் தடை விதிக்க வேண்டும் என்பதற்கான சட்ட மசோதா முன்மொழியப்பட்டது.

இதற்கு சில இந்துக்களும், தேவதாசி சமூகத்தினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அதனால் தற்காலிகமாக எந்த முன்னேற்றமும் காணாத இந்த மசோதாவை 1928ல் மெட்ராஸ் மாகாணத்தின் முதல் பெண் எம்.எல்.ஏவான



டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சட்டமன்றத்தில் அறிமுகப் படுத்தினார்.

தனது தாய் தேவதாசி முறையால் பாதிக்கப்பட்டதே, இந்தச் சட்டத்தைக் கொண்டுவர முத்துலட்சுமிக்கு உந்துதலாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

**1947**ஆம் ஆண்டு தேவதாசி ஒழிப்பு சட்டம் மெட்ராஸில் கொண்டு வரப்பட்டது.

"கோயில்கள், மத இடங்கள், இந்து கடவுள்களுக்கு முன், கோவில் திருவிழாக்களில் பெண்கள் நடனமாவது சட்டவிரோதம் என அறிவிக்கப்படுகிறது" என்றது அச்சட்டம்.

"இதை மீறுபவர்களுக்கு ஆறு மாதங்கள் சிறை தண்டனை விதிக்கப்படும். இதையும் மீறி நடனம் மற்றும் இசை நிகழ்ச்சி செய்யும் பெண், பாலியல் தொழிலாளியின் வாழ்க்கையைத் தேர்ந்தெடுத்ததாக எண்ணப்படும்."

இதனைத் தொடர்ந்து தமிழகத்தில் சுமார் **35,000** கோயில்களில், பெண் நாட்டிய கலைஞர்களுக்குத் தடை விதிக்கப்பட்டது.

### பரதநாட்டியமான சதிர் நடனம்

தேவதாசிகள் முறை ஒழிய, நடனக் கலையைக் காக்க வேண்டும் என்று சில படிப்பறிவு மிக்க புத்திஜீவிகள் முடிவு செய்தனர்.

இந்தியாவின் பாரம்பரிய கலைகள், அறிவியல், தத்துவங்கள் ஆகியவற்றைக் காக்க முடிவு செய்தனர். அடையரில் உள்ள தியோசபிகல் சொசைட்டியும் இதில் முக்கிய பங்கு வகித்தது.

ருக்மினி தேவி அருண்டேல் மற்றும் இ. கிருஷ்ண ஐயர் ஆகியோரைக் குறிப்பிடாமல் பரதநாட்டியம் என்ற ஒரு கலை இன்று இருந்திருக்காது.


கடவுள்களுக்கு முன்பு ஆடப்பட்ட நடனக்கலையை, இன்று இருக்கும் பரதநாட்டியமாக மாற்றி அமைத்தவர் ருக்மினி தேவி அருண்டேல்.

இதனை மக்களுக்கானக் கலையாகவும், பொது இடத்தில் ஆடுவதற்கு ஏற்பவும் மாற்ற பல முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. தேவதாசி சமூகத்தைச் சேர்ந்த தஞ்சாவூர் பாலசரஸ்வதி போன்றோரும், இதனை பொதுமக்கள் முன்பு ஆடும் கலையாக்க வேண்டும் என்ற முயற்சிகள் எடுக்க, இதுபோன்ற கலைகளை வளர்க்க ருக்மினி, சென்னையில் கலாக்ஷேத்திரா என்ற நடன பள்ளியைத் தொடங்கினார்.

முத்துலட்சுமியின் தேவதாசி ஒழிப்பு முறையைக் கடுமையாக எதிர்த்த இ. கிருஷ்ண ஐயர், நடனக்கலைக்கு உரிய மரியாதை அளிக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தினார்.

**1932**ஆம் ஆண்டு மெட்ராஸ் மியூசிக் அகாடமியைத் தொடங்கிய அவர், இந்த சதிர் நடனத்தைப் பரதநாட்டியம் என்று பெயர் மாற்ற வேண்டும் என முன்மொழிந்தார்.

இந்த கலையின் பெருமையை அடுத்த கட்டத்திற்கு எடுத்து செல்ல வேண்டும் என்றும்,


ருக்மினி தேவி அருண்டேல்

தேவதாசிகள் என்ற சொல் மரியாதை இழக்க, அதில் இருந்து இக்கலையை மீட்க வேண்டும் என்றும் அவர் நினைத்தார்.

**1932**ஆம் ஆண்டு மெட்ராஸ் மியூசிக் அகாடமியைத் தொடங்கினார் கிருஷ்ண ஐயர்.

இந்நிலையில், இதற்கான ஆடை, அலங்காரங்கள், அணிகலன்கள், மேடைகள் போன்றவற்றை உட்புகுத்தி, பக்தியைப் பிரதானமாக வைத்து, அரங்கேற்றம் செய்தார் ருக்மினி. கதையோடு நடனம் என்ற அம்சத்தையும் அவர் கொண்டு வந்தார்.

இந்த இருவராலுமே, சதிர் நடனக்கலை, பரதநாட்டியமாக மாறி பெரும் வளர்ச்சியை பெற்றது.

ஆனால், 16-17ஆம் நூற்றாண்டுகளிலேயே சதிர் நடனம் எல்லா தரப்பு மக்களுக்காகவும், எல்லா கலையையும் உள்வாங்கிய பரவலான கலையாக இருந்தது என தனது ஆய்வில் தெரிய வந்ததாக ஸ்வர்ணமால்யா கூறுகிறார். அந்தக் கலையின் எச்சம்தான் பரதநாட்டியம் என்கிறார் அவர்.

ஸ்வர்ணமால்யா, விராலிமலை முத்துக்கண்ணம்மாள் என்ற தேவதாசி மரபு பெண்ணிடம் தான் சதிர் நடனத்தைக் கற்றுக் கொண்டதாகக் கூறுகிறார். அவரது மாணவர்களுக்கும் இந்த நாட்டியத்தைச் சதிர் நடனமாகவே கற்றுக்கொடுப்பதாக அவர் தெரிவிக்கிறார்.

"அரசாங்கம் தேவரடியார் முறையை ஒழித்துவிட்டது. ஆனால், பரம்பரைப் பரம்பரையாக கோயில் சேவகம் செய்த எங்களின் நலனில் அக்கறை காட்டாமல் போய் விட்டார்கள். கோயில் சடங்குகளில் இருந்த முக்கியத்துவமும் குறைந்து விட்டதால், சமூக அந்தஸ்தும் இல்லாமல், வறுமை நிலைக்குத் தள்ளப் பட்டோம்" என முத்துக் கண்ணம்மாள் பிபிசி தமிழிடம் அளித்த பேட்டியில் ஒரு முறை தெரிவித்திருந்தார்.

நவீன கால பரத நாட்டியத்திற்கும், சதிர் நடனத்திற்கும் இருக்கும் வித்தியாசங்களைப் பற்றி பிபிசி தமிழ் செய்தியாளர் பிரமிளா கிருஷ்ணனிடம் பேசிய அவர், "சதிர் நடனத்தில் நாங்கள் பாடிக் கொண்டே ஆடுவோம். நம் நடனத்திற்கு ஏற்றவாறு நாமே பாட வேண்டும் என்பது அடிப்படைப் பயிற்சி. ஒரு பாடலைப் புரிந்து கொண்டு ஆடுவது என்பதைத் தாண்டி, அந்த பாடலே நாமாக மாறிக் கொண்டு, முகபாவங்களைக் கொண்டும், உடல் அசைவுகளைக் கொண்டும் இயல்பாக நாங்கள் ஆடுவோம். பாடிக்கொண்டே ஆடுவது என்பது சதிர் நடனத்தின் முக்கிய அங்கம். சதிர் நடனத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பட்ட பரதநாட்டியத்தில் நட்டுவனார் என்ற கலைஞர் பாட, நடனம் ஆடுபவர், முத்திரையுடன் ஆடுவது என்ற விதத்தில் அமைக்கப் பட்டுள்ளது" என்று விளக்கினார்.

இன்று உலகில் அதிகளவில் கற்றுக் கொள்ளப்படும் தனிக்கலையாக பரதநாட்டியம் இருக்கிறது என்கிறார் ஆஷிக்ஷ் ஷோகர். சதிர் நடனத்தில் இருந்து உருவெடுத்தாலும், இன்று பரதநாட்டியம் என்றே உலகளவில் இந்த நடனக் கலை அறியப்படுகிறது. தமிழரின் பாரம்பரிய கலைப் பெருமையின் முகமாகவும் இது இருக்கிறது.

**அடுத்த இதழில்;**
**பரதம் பயில்வதின் பலன்**




யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
2022ஆம் ஆண்டின் புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள் மற்றும்
அனைத்து கவறிங்
நகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44
Mob. : 0173 1937 325
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

# Radio - by - Phone

18 ஆம் ஆண்டில்....

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

# 00 4934 5483411998

தொலைபேசி இலக்கத்தில்

## ஐரோப்பியத் தமிழ் வானொலி

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
**00 49 231 700 977 60**

மேலதிக விபரங்களுக்கு...
**www.etr.fm**

மகிழ்வுடன்.... அகரம் | அகர தீபம் | ETR NEWS | ETR Music

தமிழாக்கம் : அன்புச் செல்வன்

சிறப்புக் கட்டுரை

# பேராசிரியர் குமார் டேவிட்டின் பார்வையில்... விக்கி எனப்படும் விக்கினேஸ்வரன்



(பேரசிரியர் குமார் டேவிட் 1963ல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பொறியியலில் சிறப்புப் பட்டங்களைப் பெற்று, உலகின் பல்வேறு நாடுகளின் பல்கலைக் கழகங்களில் பணியாற்றிய பின்னர், பொறியியல் துறைப் பேராசிரியராக ஓய்வு பெற்றார்.

இள வயது தொடக்கம், பொதுவுடமைவாதியாகவும், இலங்கை அரசியலில் அக்கறை மிகுந்தவராகவும், கொழும்பு சிங்கள ஆங்கில ஞாயிறு இதழ்களில் தொடர்ந்து அரசியல் சமூகப் பிரச்சினைகளை எழுதியும், இலங்கை வாசகர்களின் மனதில் மதிப்பான இடத்தை வகித்து வருபவர்.



அவர் அண்மையில் விக்கினேஸ்வரனின் அரசியலும், அறிவு நுட்பமும் எப்படிச் சிங்களத் தலைவர்களின் சிம்ம சொப்பனமாக விளங்குகின்றன? என்பதைச் சுவைபட விவரித்துள்ளார். அவற்றின் சில பகுதிகளை எமது அகரம் வாசகருக்காக இங்கே தருகிறோம்.)

ஒக்டோபர் 11ல் கொழும்பு ரெலிகிராஃப் தளத்தில் வெளியான தமது கட்டுரைக்கு அவர் இட்டுள்ள தலைப்பே, 'விக்கி கோட்ட பாயாவையும், மகிந்த ராஜபக்ஷவையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் தந்திரத்தால் வீழ்த்தி விடுவார். தமிழ் பௌத்தமும், சிங்கள பழமை வாதமும் அவருக்கு ஒரு பொருட்டே இல்லாதவை'.

கோட்ட பாயா, மகிந்த, த.தே.கூட்டமைப்பைப் பிடிப்பதற்காகப் பொறிகளை வைக்கவில்லை. அது எனது தலைப்பின் முக்கியமும் அல்ல. நான் சொல்ல நினைப்பது இந்தப் பெருந்தலைகள் எல்லாம் தாமாகவே தமது பொறிகளுக்குள் மாட்டுவார்கள் என விக்கி கணக்குப் போடுகிறார்.

அதன் பின்னர் தனது கணக்குப் பயனளித்து விடும். இந்த அரசு வெளிப் படையாகவே தமிழ் இன எதிர்ப்பில் திரும்பிவிடும் என்பது அவரது முதல் எதிர்பார்ப்பு. அவரது இரண்டாவது கணிப்பு த.தே.கூ. தன்னைக் காப்பாற்ற மிக அதிகமான விட்டுக் கொடுப்புகளைக் கொடுத்து, தானே விடுவித்துக் கொள்ள முடியாத ஆழத்தில் மாட்டிக் கொண்டு விடும் என்பதாகும்.

கண்டிப்பாக அவர் தொடர்பாக நான் உள்நோக்கம் கற்பிக்கிறேன். ஆனால், அரசியலில் ஆய்வாளர்கள் ஏன்? அரசியல்வாதிகள் இதைச் செய்யவில்லை அல்லது அதைச் செய்ய வில்லை? என நியாயமான எல்லைகளுக்கு உட்பட்டு இப்படியான அனுமானங்களைச் செய்வது தவறில்லை. நான் அத்தகைய நியாயமான எல்லைகளுக்கு உட்பட்டுச் செய்வதால், அநியாயமாக விக்கி மீது உள்நோக்கம் சுமத்துவது ஆகாது.

'இலங்கையின் போர்க் களப் படைத் தளபதிகளும், கடற்படை தளபதிகளும் வாயில் நுரை தள்ளி வருவதை அவர் ரசிக்கிறார் என்பது மேலதிகமான வேடிக்கை எனலாம். எந்த அளவுக்கு அதிகமாக அவர்கள் வாயில் நுரை தள்ளுகிறார்களோ, அந்த அளவுக்கு அவரது விளையாட்டு மைதானமும் விசாலமாக உள்ளது.

அந்தக் கிழட்டு நரியின் படைக் கலங்களில், தமிழ்தான் இந்தத் தீவின் மூலமொழி, சிங்கள மொழி கி.பி 6 அல்லது 7ஆம் நூற்றாண்டுகளில் தோன்றியது. இலங்கையின் முதல் புத்த மதத்தவர்கள் தமிழர்களே!. பின்னர் கி.மு. முற்பகுதிகளில் சைவர்கள் ஆனார்கள். துட்ட கைமுனு ஒரு தமிழ் பௌத்தன். தமிழ் சைவனான எல்லாளனுடன் போரிட்டான் போன்ற சரக்குகள் உண்மையாக இருந்தாலும் கூட, அவற்றை சொன்னாலே 'கெல ஜாதிக அபிமான' ரத்தங்களைக் கொதிப்படையச் செய்துவிடும்.'

(விக்கியின் வார்த்தைகளை உண்மையாக இருந்தாலுங் கூட என அவர் சப்பைக் கட்டு கட்டுவதில் இருந்து அவற்றை அவராலோ அல்லது வேறு எவராலோ மறுக்கப்பட முடியாத வரலாற்று உண்மைகள் என அவரே ஒப்புக் கொள்கிறார்.)

விக்கி இவற்றைப் பாட வேண்டும் என்பதற்காகவா அல்லது அரசியல் இலாபங்களுக்காவா என்பதை ஒரு புறத்தில் ஒதுக்கினாலும், அவற்றுக்கான வரலாற்று அல்லது மானுடவியல் ஆதாரங்கள் என்ன? முதலில் விக்கியின் 'போலி அடிபுடி', வயதான இரண்டு பைத்தியங்கள் போடும் சண்டை, அதனை நிபுணர்கள் இனம் மற்றும் தத்துவார்த்த பாகுபாடுகளைக் கடந்து ஆராய்ந்துப் புனைவுகளில் இருந்து உண்மைகளைப் பிரிப்பார்கள் என நான் நினைத்தேன்.

ஆனால், எல்லா நிபுணர்களும் ஒதுங்கி விட்டார்கள். இந்த விடயம் எவ்வளவு பெரியப் பூதாகாரமாக வெடிக்கும் என்பதை எங்களுக்குச் சொல்கிறது. கடந்த வருடங்களில் நான் சில சுயாதீனமான வாசிப்புகளைச் செய்தேன். (மீண்டும் இவர் உண்மைகளைக் கண்டு தீக் கோழி போல தலையை மறைத்துக் கொள்கிறார்)

எனவே, தேவதைகள் கால் வைக்கப் பயப்படும் பாதையில், முட்டாள்கள் நுழைய வேண்டி உள்ளது. தமிழா? சிங்களமா? அல்லது டச்சு மொழிகளா பழமையானது? அல்லது தமிழர்களா? சிங்களவரா முதலில் மதம் என்கிற அபினை முகர்ந்தார்கள்? என்பதைப் பற்றிய கவலை எனக்கில்லை. (ஆகா அற்புதமான சிந்தனை)

இலங்கையின் சிறந்த வரலாற்று ஆசிரியர்களான லெஸ்லி றல்ஃப்



இன, மத, பேதம் கடந்த விக்கி குடும்பமும் உறவுகள் நண்பரும்.

குணவர்த்தனா மற்றும் மானுடவியலாளர் சுதர்ஷன் செனவிரட்ன ஆகியோரின் எழுத்துகளைப் படித்திருக்கிறேன். (எல்லாரும் சிங்களவரே)

இந்திர பாலாவின் மிகச் சிறந்த இன அடையாளங்களின் தோற்றம், கனானத், விக்கிப் பீடியா சரக்குகள், கே.எம.டி.சில்வா எழுத்துகள் பற்றி கொஞ்சம் இந்த அளவுக்குப் பேச முடியும். அதாவது யாராவது ஓர் நிபுணர் தனது துணிச்சலை வரவழைத்துப் பேசும் வரை, இப்படி ஏதாவது பேச இடம் தாருங்கள். (அண்ணாச்சி சரணாகதி ஆயிட்டார்)

விக்கி குடும்பம், மகிந்தர் வாசுதேவ நாணயக்கார போன்ற பிரபலங்களுடன் படத்தில் நிற்கிறார். அவருடைய மனைவி, 2 மகன்களும், ஒரு மருமகளும், 2 பேரப் பிள்ளைகளும் இப்படத்தில். இவர்களில் சாகச நாயகனான டார்ஸான் யார்? விக்கிதான் என்பதைச் சொல்லாமல் சொல்லிவிட்டார். தனது தலையை வெளியே எடுத்து விட்டார்.

ஆம்! தமிழ் உயிருடன் வாழும் மிகப் பழமையான மொழிகளில் ஒன்று. உயிருடன் என்றால் இன்னமும் பேசப்படுகிறது. சீனம், கிரேக்கம் மற்றும் தமிழ் மிகப் பழமையானதாக இருக்கலாம். கி.மு. காலத்தில் குறிப்பாக சோழர்களின் பலத்தால் சைவ சமயம் மூழ்கடிக்கும் முன்னர், குறிப்பாக தென் இந்தியாவிலும், இலங்கையிலும் வாழ்ந்த தமிழர்கள் பலரும் (பெரும் பாலானவர்கள்) புத்த மதத்தவர்களாக இருந்துள்ளனர்.

3வது கருத்து. நிபுணர்கள் தாக்குதலில் இருந்து தப்பிக் கொள்வதற்காகப் பேசத் தயங்குகிறார்கள். சிங்கள மொழி தன்னிச்சையாக கி.பி.5ஆம், 6ஆம் நூற்றாண்டுகளில், அதாவது அண்மைக் காலங்களில் தோன்றியது.

மகாவம்ச காலத்துக்கு முன்னர் கல்வி கற்றவருக்கும், மதகுருவினருக்கும் பிராக்கிருத மொழியும் படித்தவர்களின் மொழியுமாக பாளி மொழியும் இருந்தது. பழைய காலத்தில் ஒரு சில ஆயிரம் மக்கள் சிறு குழுவினராகவும், சமூகங்களாகவும், கெல, எழு, எலு, என்கிற மொழியைப் பேசினார்கள்.

எனவே, சில பண்டிதர்கள் மீள அந்த மொழியை மீட்க வேண்டும் என்பதிலும் ஒரு நியாயம் உள்ளது. அதற்காகத் தமிழ் மொழியை அழிக்க வேண்டும் என நினைப்பதில் என்ன நியாயம் கண்டீர் ஐயா?

இந்திய மொழி பேசிய விஜயனும், அவனுடைய கொள்ளைக் கூட்டமும் தீவு அடங்கலும் வாழ்ந்த சமூகங்களுடன் கலந்துப் பல்கிப் பெருகினர். ஒரு சில நூறு பேர்களைக் கொண்ட அவர்களால் மிகப் பெரும் விந்து தானங்களைச் செய்திருக்க முடியாது. ஞானம் பிறந்திடிச்சோ?

வடக்கில் இருந்தவர்கள் பூர்வ குடிக் குழுக்கள். ஆனால், மொழியால் கி.மு. காலப் பகுதியில் இடம் பெற்ற குடிப் பெயர்வுகளால் தமிழ் மயப்படுத்தப் பட்டவர்கள். மரபணுவால் தமிழ் சிங்கள மக்கள் பெருமளவில் ஒரே குலத்தின் வழி வந்த மக்களே!. ஆனால், இக்காலத்தில் ஒருவர் கண்களை மற்றவர் தோண்டி எடுக்கவே விரும்புகிறார்கள்.(மறுபடியும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறி விட்டதோ?)

பின்னர் சிறப்பான கதை வருகிறது. போரிடும் முட்டாள்களின் வேற்றுமை இனம் அல்ல. அவர்கள் ஒரே மரபணுக் குழுவைச் சேர்ந்தவர்கள். அது மரபியல் பற்றியது. மொழி, மதம், கலாச்சாரம், சோழப் படையெடுப்பின் பின்னால் இனத்தால் ஒரே மக்களிடையே இரு வேறு கலாச்சாரங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஊற்றெடுத்தன. இன்று நாம் எதிர் கொள்ளும் மனதால் பின்னடைந்த இரு சமூகங்கள் இவைதான். லெஸ்லி இந்திரபாலாவின் எழுத்துகளில் நாகரிகமாக தரப்பட்டுள்ளன. (எப்படி வட இந்தியன் விஜயனும், அவனது கொள்ளைக் கூட்டமும் ஒரே மரபணுவைக் கொண்டிருக்க முடியும்?)

கோத்தபாயா ராஜபக்சே, மகிந்த ராஜபக்சே அரசுகள் முதலில் முஸ்லிம்களை அமுக்கி விட்டுப் பின்னர் தமிழ் மக்கள்மீது திரும்பும் என விக்கி சந்தேகப்படுகிறார். எங்களைப் போன்றே பொருளாதாரச் சிக்கல் பாரிய எதிர்கால அழுத்தங்களை உண்டு பண்ணும் என விக்கி சந்தேகப்படுகிறார். அப்படியான ஒரு தருணத்தில் இனப் பிரச்சினையை விட, அரசுக்கு இலாபம் தரக் கூடியப் பிரச்சினை வேறு என்னவாக இருக்க முடியும்?

பல விகாராதிபதிகளும், அரசும் அமைச்சர்களும் மரணங்களின் வியாபாரிகள். அவர்களைக் கோத்தாவும், மகிந்தாவும் கட்டிப் போட நினைக்க மாட்டார்கள். அங்கேதான் அதிகாரம் இருப்பதைக் காட்டுகிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு நிறைய விட்டுக் கொடுத்து விட்டது.

அதன் முயற்சிகள் கொள்கைகள் அற்று இருக்கவில்லை. சிங்களவருடன் சமரசம் செய்யாமல், தமிழரால் எங்கேயும் போக முடியாது. அது ஐ.தே.க. ஸ்ரீ.ல.சு.க. ஸ்ரீ.ல.ம.க. போல் இல்லாமல் தாராளமானது என்பதால், நல்லாட்சி அரசை ஆதரித்தது. ஆனால், பாவப் பட்டதுகள் செல்வாவைப் போன்றே வெறுங்கையுடன் இருந்தாலும், பிரபாகரன் போல கல்லாகச் செத்து விடவில்லை. (முதலை ஒன்று கண்ணீர் வடிக்கிறது). தமிழராய் வாழ்வோம், தமிழராய் எழுவோம், தமிழராய் ஆள்வோம்.

இலங்கையின் நாணய மதிப்பை மூடி இன்வெஸ்ரர் சேவை நிறுவனம் 2படிகள் தரம் குறைத்து நாட்டின் கடன் வாங்கும் திறனை அதி கடின நிலைக்கு தள்ளி விட்டது.

நாட்டின் நிதிப் பாவேட்டின் நிலை கவலைக்கிடமாய் உள்ளது. கூட்டத்தின் கூச்சல் எல்லாம் ஒரு படிதன்னும், நாட்டின் நிதி நிலையை மேலே உயர்த்தப் போவதில்லை. சிக்கலகள் அதிகரிக்கும் பொழுது அரசு சிறுபான்மை மக்களின் பின்னால் போகும் என விக்கி கணக்குப் போடுகிறார். ஒரு வேளை 20 ஆவது திருத்தச் சட்டத்தின் பின்னரான அரசு ஏன் சிதையும்? பொருளாதாரம் எதேச்சாரிகள் செய்வதையே செய்வார்கள் என விக்கி கணக்குப் போடுவதாக இருக்கலாம்.

விக்கி பார்வைக்கு விசமத்தனமாக 'கெல ஜாதிக அபிமானே சகோதரத்துவத்துக்குத் தூண்டில் போடுவதில் மகிழ்வாக இருக்கிறார். ஆதாரம் வேண்டும் என்றால், கொழும்பு ரெலிகிராஃபில் விக்கியின் கட்டுரைகள் பெறும் நூற்றுக் கணக்கான, முட்டாள்தனமான, மூளையற்ற கருத்துப் பதிவுகளைப் படித்துப் பார்த்தால் தெரியும்.

தீவிரமாகப் பார்த்தால் நான் நினைக்கிறேன், அடுத்தபடியாக தமிழர் தலைமை பேசுகிறபடி நடக்கிறவரிடம் போகும் என விக்கி கணிக்கிறார். யார் அதிகம் துணிச்சலான தமிழர்? தமிழ் தீவிரவாதம், சிங்கள அரசியலின் பின் விளைவு. போர்க் குணம் கொண்ட விக்கியும், காலப் போக்கில் சமரசம் செய்ய வேண்டும். அதை விட வேறு தெரிவு கிடையாது. உண்மை அதுவானால் 'ஆறு மனமேஆறு'.

விக்கியும் முதுமை காரணமாக மாறலாம். ஆனால், தமிழன் மாறாமல் எழுந்து நடப்பான். சிங்களமே மனப்பால் குடிக்காதே!. இன்னும் பல பிரபாகரன்கள் தமிழ் மண்ணில் தோன்றுவார்கள்.




Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56

Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44

எமது புதிய கிளை
EO Tychboden Parkweg 2
4665 Oftringen
வெகுவிரைவில்...

IMPOrtas
International Foods & Beverages
www.importas.ch
info@importas.ch

மொத்த விற்பனை நிலையம்
Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38 , Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch


தேவன்

"Jews love to pit armies against each other like chess pieces, because it makes feel like gods"

- Victor Ostrovsky








# இலங்கையில் MOSSAD ஏற்படுத்திய குழப்பங்கள்

*1983* இலிருந்து ***Mossad*** மறைமுகமான, உத்தியோகப் பூர்வமற்ற ***(False - Flag Raid )*** செயற்பாடுகளை இலங்கையில் நடத்தியிருக்கிறது. *1983* இல் ஜே.ஆர்.ஜயவர்தன வின் அழைப்பின் பேரில் ஐம்பது ***mossad*** அதிகாரிகள் இலங்கை வந்து, மாதுறு ஓய விற்கு அருகிலான காட்டுப்பகுதி ஒன்றில் இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சி அளிக்கிறார்கள். ***Way of Deception*** என்ற நூலை எழுதிய ***Victor Ostrovsky*** என்ற எழுத்தாளரது பத்தியில், *1984- 1985* காலப்பகுதியில் இலங்கையிலிருந்து ஒரு தமிழ்க் குழுவை இசுரேலுக்கு அழைத்து வந்து, பயிற்சியளிக்கும் வேலையை ***mossad*** செய்ததாகவும், அவர்களுக்கான செலவுகளைச் சிங்கள அரசே வழங்கியதாகவும் கூறுகிறார். இதற்கான ஒப்பந்த வேலைகளைச் செய்தவர் பிரித்தானியக் கடவுச்சீட்டில் இந்தியாவில் வாழ்ந்து வந்த ஒரு ***Mossad*** தொடர்பாளர் ஆவார்.

*1984* இல் இந்திய ***Raw*** வின் தமிழ்நாட்டுக்குரிய உள்ளக அதிகாரிகளைச் சந்தித்த ***Mossad*** தொடர்பாளர்கள், இலங்கையிலிருந்து இந்தியா வந்திருக்கும் போராளிக் குழுக்களில் யாரையாவது ஒழுங்கு செய்து இசுரேலுக்கு அனுப்பி வைக்குமாறு வேண்ட, அவ்வாறு ***Raw***

வினால் ஒழுங்கு செய்யப்பட்ட குழு ***TELO*** என்று அறிந்து கொண்டதாகவும், ***Victor Ostrovsky*** குறிப்பிடுகிறார். அதைவிடவும் அவர் குறிப்பிட்டிருக்கும் விதம் சற்றே வித்தியாசமானது. "முக்கியமாக அவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்தவர்கள்" ஆவார்கள்.

அதேவேளை, சமமாக சிங்களவர்கள் அடங்கிய குழுக்களும் பயிற்சிக்காக இசுரேல் வந்து சென்றன. ஒவ்வொரு குழுவிலும் 60 நபர்கள் இருப்பார்கள். ***Tel Aviv*** இலுள்ள ***Kfar Sirkin*** என்ற தளத்திலேயே இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இங்கே பயிற்சியளிக்கப் பட்ட ***Telo*** அணியினரை, ***Haifa*** என்ற இடத்திலுள்ள ***ATLIT*** என்ற இரகசியக் கடற்படைத் தளத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள்.

இலங்கையில் நடைபெற்ற பல முக்கிய குண்டுவெடிப்புகளில் ***Mossad*** இந்த அடையாளங்கள் இருப்பதாகக் குறிப்பிடும் அவர், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருந்த காலப் பகுதியில், சிங்களக் கிராமங்களில் நடைபெற்ற குண்டுவெடிப்புகளில் பல, ***Mossad*** இனால் நடாத்தப்பட்டவையே என்கிறார். ஆனால், உலகச் செய்தி நிறுவனங்கள் அனைத்துமே யூதர்களின் கையில் இருப்பதால், இவை எதுவும்பற்றி அவை ஆராயாது என்றும் குறிப்பிடுகிறார்.

யூதர்களால் தம்மைத்தவிர மற்ற அனைவரையும் 'கோயிம்' என்பார்கள். கோயிம் என்றால் அழிக்கப்பட வேண்டியவர்கள் என்பது அவர்களது யூதர்களது எண்ணம். இலங்கையில் உள்ள கோயிம்களை, ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டு சாக விடுவதோடு, தமது ஆயுத வியாபாரமும் கொடிகட்டிப் பறக்க வேண்டுமென்ற எண்ணமும் நீண்டகாலமாக அவர்களுக்கு இருந்து வந்திருக்கிறது.

60 பேர் கொண்ட குழுவிற்குப் பயிற்சியளிக்க அந்நாளிலேயே 300 அமெரிக்க டொலர்கள் இலங்கை அரசிடமிருந்து பெறப்பட்டிருக்கிறது. மூன்று மாதத்திற்கு ஏறக்குறைய 1.6 மில்லியன் டொலர்களைப் பயிற்சிக்காக மட்டும் இசுரேல் பெற்றுக் கொண்டது. அதைவிடவும்; உலங்குவானூர்தி வாடகை






5,000 டொலர்கள் கட்டணமாக விதிப்பார்கள்.

ஆனால், தமிழ்க் குழுவிடமிருந்து எவ்விதமான கட்டணங்களும் பெறப் படவில்லை. ஏனெனில் இலங்கையில் தாம் தொடங்கப் போகும் பாரிய போரிற்கு, இது மூலதனம் என்று எண்ணிக் கொண்டார்கள். பொருளாதாரத்தைக் கொலை செய்தல் மற்றும் மக்களை மனவள அளவில் கொலை செய்தல் மூலமாக, தமது இலக்கை அடைவதில் யூதர்கள் வல்லவர்கள்.

இதேவேளை இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 27 இராணுவத்தினரும் இசுரேலிற்குப் பயிற்சிக்காக வந்திருந்தார்கள். ஆனால், இவர்கள் இலங்கையின் தமிழ் மற்றும் சிங்களக் குழுக்களைக் கண்டுவிடக் கூடாது என்பதில் இசுரேலியர்கள் மிக அவதானமாக நடந்து கொண்டார்கள். இலங்கையின் குழுக்களுக்குப் பயிற்சி அளித்த ***Sayret Matcal*** எனப்படும் ***Commando*** அணியே, ***1976*** இல் உகாண்டாவின்

***Entabbe*** வானூர்தித் தளத்தில் பணயக் கைதிகள் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள். தமிழர்களையும், சிங்களவர்களையும், இந்திய இராணுவத்தையும் இசுரேல் எந்த மனநிலையோடு கையாண்டது என்பதை மிகவும் தெளிவாக ***Victor Ostrovsky*** இவ்வாறு குறிப்பிடுகிறார். ***"Jews love to pit armies against each other like chess pieces, because it makes feel like gods"***

இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் ஒரே வேகத்தில் பல இடங்களில் போர் உருவாக்க வேண்டும் என்று இசுரேல் முனைப்புக் காட்டியது. அதற்காக தம்மிடமிருந்த திறமை மிகுந்த அதிகாரிகளைக்கூட இலங்கைக்கு அனுப்பியிருக்கிறது. நாசி இராணுவத் தளபதியான ***Adolf Eichmann*** ஐ ஆர்யென்ரீனாவிலிருந்து தூக்கிவந்த இசுரேலின் முக்கிய அதிகாரியான ***Rafi Eitan*** என்பவரை இலங்கையில் ***Mossad*** நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக ***1985*** இல் இசுரேல் இலங்கைக்கு அனுப்பி வைத்தது. அதிகாரியாக அல்லாமல், இரசாயனப் பகுப்பாய்வு நிலையத்தில் பணிபுரியும் சாதாரண ஊழியராக அவர் இலங்கை வந்திருந்தார்.

இலங்கைக்குள் ***Mossad*** அணியை நுழையவிட்டது இலங்கை செய்த மாபெரும் தவறு என ஜே.ஆர். ஐவர்தனவைக் கண்டித்த இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி, சிலநாட்களின் பின்பு சுட்டுக்கொலை செய்யப் பட்டதையும் இங்கே அடையாளப் படுத்துகிறார் ***Victor Ostrovsky.*** இசுரேலின் கொலைகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் நிதி மூலம் தரும் ***BCCI*** வங்கிக்கு வந்து சேரும் கறுப்புப் பணம் முழுவதுமே, யூத ***Mafia*** க்களின் பணமே ஆகும்.

***1972*** இல் இதை நிறுவியர் பாக்கிசுத்தானைச் சேர்ந்த ***Hasan Abedi*** என்பவராவார், இதன் தலைமையகம் லக்சம்பெர்க் நாட்டில் இருப்பதோடு, உலகெங்கும் ***78*** நாடுகளில் ***400*** கிளைகளோடு வருடந்தோறும் ***25*** பில்லியன் டொலர்கள் இங்கே வைப்புச் செய்யப்படுகிறது. அதைவிடவும் உலகின் பாரிய உளவு அமைப்புகளான ***CIA,*** பாக்கிசுத்தானின் ***ISI,*** இங்கிலாந்தின் ***MI 6,*** கூட தமது நடவடிக்கைகளுக்காக இந்த வங்கியை உபயோகிப்பது வழமை. 'மகாவலி அபிவிருத்தி நிதி' க்காக பெறப்பட்ட நிதியின் பெரும்பங்கை ***Mossad*** உம் ஜெயவர்தனவும் பங்கு போட்டுக் கொண்டதாகவும் கூறுகிறார் ***Victor Ostrovsky.***

இலங்கையில் நடைபெற்ற பல முக்கிய குண்டுவெடிப்புகளில் ***Mossad*** இந்த அடையாளங்கள் இருப்பதாகக் குறிப்பிடும் அவர், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டிருந்த காலப் பகுதியில், சிங்களக் கிராமங்களில் நடைபெற்ற குண்டுவெடிப்புகளில் பல, ***Mossad*** இனால் நடாத்தப்பட்டவையே என்கிறார். ஆனால், உலகச் செய்தி நிறுவனங்கள் அனைத்துமே யூதர்களின் கையில் இருப்பதால், இவை எதுவும் பற்றி அவை ஆராயாது என்றும் குறிப்பிடுகிறார்.

CENTURY
TRAVELS GMBH

# SUMMER 2022

## Frankfurt Direct Flights



**JAN 01 - MAR 31**
AB 695€
40 KG

**APR 01 - JUL 12**
AB 725€

PACKAGE
€99

இந்தியாவுக்கான விசா ஒழுங்குசெய்து தரப்படும்

## 5 STAR SERVICE

சிறப்பு சலுகை விலை

**MÜNCHEN COLOMBO**
**BERLIN COLOMBO**

திகதி மாற்றம் இலவசம்
**Date Change FREE**

4 கிழமைக்குள் பணம் திருப்பித் தருதல்
**Refund Within 4 WEEKS**

இலங்கை விசா
~~60~~ 40
**Srilanka Visa**
~~60~~ 40

பதிவேற்றம் (Declaration Form)
Self Declaration Form
**Corona Travel Information**



**Nishanthan 0176 2168 2149**

0231 58 96 557 | 0231 55 74 319

Rheinische Str.29-44137-Dortmund | www.centurytravels.de | info@centurytravels.de



Free
Talk Time
amazon
BOX
%
%
VBOX
SUPER
SALE
IN GERMANY
109 €
ONLY
CALL
+49 1514 6978484
ONE MONTH'S FREE
TALK TIME TO 132
COUNTRIES, INCLUDING
INDIA AND SRI LANKA,
FOR EVERY
VBOX PURCHASED IN
GERMANY.